இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 222 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 10 – சனிக்கிழமை 23 மார்ச் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 222 : Thiruvalluvar Year - 2055 - Panguni 10 - Saturday 23 March 2024 - Chennai 12 Pages ₹ 5.00

## இந்தியாவைக் காக்கும் வெற்றிப் பயணத்தை திருச்சியிலிருந்து தொடங்குகிறேன்!

# திருச்சிப் பாதை எப்போதும் நம் வெற்றிப் பாதை!

## நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சாரத்தை தொடங்கி தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி முழக்கம்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.3.2024) திருச்சிராப்பள்ளி, சிறுகனூரில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார முதல் பொதுக் கூட்டத்தில், திருச்சி தொகுதி வேட்பாளர் ம.தி.மு.க. தலைமைக் கழக செயலாளர் துரை வையாபுரி அவர்களையும், பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் அருண் நேரு அவர்களையும் அறிமுகப்படுத்தி, பிரச்சாரத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

**திருச்சி,மார்ச்.23–**

**திருச்சியில் பிரம்மாண்டமாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பா.ஜ.க.வில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் சொல்கிறேன் உங்களுடைய ஆணவம்தான் பா.ஜ.க.வை வீழ்த்தப் போகிறது! இந்தியாவைக் காக்கும் வெற்றிப் பயணத்தை திருச்சியில் இருந்து தொடங்குகிறேன்! திருச்சிப் பாதை எப்போதும் – வெற்றிப் பாதை என உறுதிப்படக் கூறினார்.**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (22.03. 2024) திருச்சியில் நடைபெற்ற 'திருச்சி, பெரம்பலூர்' மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தல் பரப்புரையில் கலந்துகொண்டு ஆற்றிய எழுச்சியுரையின் விவரம் வருமாறு:

டெல்லி செங்கோட்டையை யார் கைப்பற்ற வேண்டும் என்று தீர்மானிக்க இந்த மலைக் கோட்டை மாநகரில் கடல்போல் திரண்டிருக்கும் தமிழ்ச் சொந்தங்களே! திருச்சி என்றாலே திருப்புமுனை! இப்போது இந்தியாவுக்கே திருப்புமுனை ஏற்படுத்த நாம் திரண்டிருக்கிறோம்! பல திருப்புமுனைகளை தமிழ்நாட்டுக்கு கொடுத்து, தமிழினத்தின் முன்னேற்றத்துக்காக தன்னுடைய வாழ்நாளெல்லாம் உழைத்த தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டுப் பரிசாக, ஒரு மகத்தான வெற்றியை கொடுப்பதற்கான துவக்கமாக இங்கு திரண்டிருக்கிறோம்!

> **நேரு அவர்கள் சொன்னது போல், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, 'தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கம்' என்ற எழுச்சிமிகு கூட்டத்தை ஏற்பாடு செய்து, இங்கு அழைத்து வந்தார் ஆருயிர் சகோதரர் கே.என். நேரு. அதுதான் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை அமர வைத்தது! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். அன்று முதல், இந்தியாவே பாராட்டும் நல்லாட்சியை நடத்தி வருகிறேன்.**

### நாற்பதுக்கு நாற்பது வெற்றி நாம் எழுப்போகும் புதிய வரலாறு!

வெற்றி என்றால் எப்படிப்பட்ட வெற்றி? நாற்பதுக்கு, நாற்பது! நாற்பதுக்கு, நாற்பது! நாம் எழுதப் போகும் புதிய வரலாற்றுக்கு முன், தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் தலைவர் கலைஞரையும் வணங்கி, இந்தப் பயணத்தைத் தொடங்குகிறேன். மாநாடுபோல இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள்.

எல்லாவற்றுக்கும் தொடக்கமாக இருப்பது இந்தத் திருச்சிதான்! திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்க வேண்டும் என்று 1956 ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டது திருச்சி மாநாட்டில்தான்! திருச்சி பாதை எப்போதுமே வெற்றிப் பாதை! அதன் அடையாளமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆறு முறை ஆட்சிப் பொறுப்பை வழங்கியிருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்!

நேரு அவர்கள் சொன்னதுபோல், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, 'தமிழ்நாட்டின் விடியலுக்கான முழக்கம்' என்ற எழுச்சிமிகு கூட்டத்தை ஏற்பாடு செய்து, இங்கு அழைத்து வந்தார் ஆருயிர் சகோதரர் கே.என்.நேரு. அதுதான் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை அமர வைத்தது! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டேன். அன்று முதல், இந்தியாவே பாராட்டும் நல்லாட்சியை நடத்தி வருகிறேன்.

இந்தியா கூட்டணி ஆட்சியை

ஒன்றியத்தில் ஏற்படுத்துவோம்!

பாசிச பா.ஜ.க.வை வீழ்த்தி, இந்தியா கூட்டணியின் ஆட்சியை ஒன்றியத்தில் ஏற்படுத்துவதற்காக நடப்பதுதான், இந்த நாடாளுமன்றத் தேர்தல்!

தேர்தல் என்பதால் பிரதமர், இப்போது இந்தியாவில் இருக்கிறார்; அதனால் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருகிறார். இல்லை என்றால், பெரும்பாலும் வெளிநாட்டில்தான் இருப்பார். சமீபத்தில் சேலத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி அவர்கள், "தமிழ்நாட்டில் அவருக்கு செல்வாக்கு அதிகமாகிவிட்டதால், தி.மு.க.வினருக்குத் தூக்கம் வரவில்லை என்று பேசியிருக்கிறார். உண்மையில், தன்னோட ஆட்சி முடியபோகிறது என்று, பிரதமர் மோடிக்குத்தான் தூக்கம் வரவில்லை! அவருக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி பயம், அவரின் முகத்திலும் – கண்ணிலும் நன்றாகத் தெரிகிறது!

சரி, தமிழ்நாட்டுக்கு இத்தனை முறை வந்தாரே, அவரிடம் நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்டேன். அதுக்கு ஒருமுறையாவது பதில் சொன்னாரா? வாரா வாரம் வந்தாலும் அவர் பதில் சொல்லவில்லை! இனி வந்தாலும், சொல்லவும் முடியாது! பத்தாண்டு காலம் ஆட்சி செய்த ஒரு பிரதமரால், தமிழ்நாட்டுக்குச் செய்த சிறப்புத் திட்டம் என்று ஒன்றே ஒன்றைக்கூட சொல்ல முடியுமா! இவர் நம்மை விமர்சிக்கிறார்!

இப்போது நான் சொல்கிறேன், நம்முடைய

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்,

## க.பொன்முடி மீண்டும் அமைச்சராகப் பொறுப்பேற்றார் !

**சென்னை, மார்ச் 23–**

**உச்சநீதிமன்றத்தின் கண்டனத்தை தொடர்ந்து, பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்பு விடுத்தார். நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பொன்முடிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.**



சொத்து வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது. உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, எம்.எல்.ஏ. பதவியில் பொன்முடி தொடர்வதாக சட்டப்பேரவைச் செயலகம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து பொன்முடிக்கு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆளுநருக்கு பரிந்துரை செய்தார். ஆனால், இந்த பரிந்துரையை ஏற்க ஆளுநர் மறுத்து விட்டார்.

ஆளுநரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, முதலமைச்சர் பரிந்துரைத்தும் பொன்முடிக்கு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுப்பது ஏன்? என ஆளுநரை உச்சநீதிமன்றம் கண்டித்தது. தண்டனையை நிறுத்தி வைத்த பிறகு இவ்விவகாரத்தில் தலையிட ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும், அரசியல் சாசன சட்ட விதிகளை ஆளுநர் பின்பற்ற வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துவைக்க ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் 24 மணிநேரம் கெடு விதித்தி ருந்தது. 24 மணி நேரத்திற்குள் ஆளுநர் நல்ல முடிவை எடுக்காவிட்டால் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் எச்சரித்தது. இந்நிலையில், பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்புவிடுத்து நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பொன்முடிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பொன்முடியை அமைச்சராக பதவியேற்க, ஆளுநர் அழைப்பு விடுத்த தகவலை ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் பதிவு செய்தார். எனவே, ஆளுநருக்கு எதிராக எந்த உத்தரவுகளும் பிறப்பிக்க வேண்டாம் என ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் கோரிக்கைவிடுத்தார்.

தனது செயலுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி மன்னிப்பு கோரியதாகவும் அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி தெரிவித்தார். இதைத்தொடர்ந்து ஆளுநரின் நடவடிக்கையை எதிர்த்து தொடரப்பட்ட மனு முடித்து வைக்கப்பட்டது. நாட்டின் ஜனநாயகம் உச்சநீதிமன்றத்தால் காப்பாற்றப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான அபிஷேக் சிங்கி, வில்சன் ஆகியோர் குறிப்பிட்டனர்.

இதனிடையே, அமைச்சராகப் பதவியேற்ற பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்து மீண்டும் உயர்கல்வித் துறையை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற முதலமைச்சரின் பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### பாஜக கூட்டணி



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 23-03-2024

# மதச்சார்பற்ற நாட்டில்...

“மதச்சார்பற்ற நாட்டில் அனைவர்க்கும் பொதுவான சட்டம் தான் இருக்க வேண்டும்” - என்று கருத்துச் சொல்லி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. அப்படியானால் உங்கள் அனைவருக்கும் பொதுவான சட்டங்கள்தான் இருக்கிறதா? வேறு யாருக்கும் சிறப்பான சட்டங்கள் இல்லையா? எதற்காக சிறுபான்மையினருக்கு ஆதரவான சட்டங்கள் மட்டும் குறி வைக்கப்படுகிறது?

‘பொது சிவில் சட்டத்துக்கு அனுமதி வழங்கக் கூடாது’ என வலியுறுத்தி, 22வது சட்ட ஆணையத்திற்கு தி.மு.க. சார்பில் ஏற்கனவே கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தி.மு.க. பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அனுப்பிய கடிதத்தில்,

> **“இந்திய மக்கள் பல்வேறு மத, மொழி, இனக் குடும்பமாக, ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்ற அடிப்படையில் வாழ்ந்துவருகிறார்கள். அவரவர் பழக்க வழக்கங்களை அவரவர் பின்பற்றி வருகிறார்கள். இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமை பிரிவு 25-ன்படி குடிமக்கள் அனைவரும் தாங்கள் சார்ந்துள்ள மத வழக்கங்களைப் பின்பற்றவும், பரப்பவும் உரிமை பெற்றவர்களாவர். இத்தகைய வேறுபாடுகள் நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை வலிமையாக்கி உள்ளது.**
>
> **பா.ஜ.க.வின் ‘ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மொழி, ஒரு பண்பாடு’ என்ற கொள்கை சட்ட விரோதம் ஆகும். இந்த நோக்கத்துடன்தான் பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், மதச் சார்பின்மைக்குக் குந்தகம் ஏற்படுத்துவதுடன், சட்டம் - ஒழுங்கு பாதிப்பு, அமைதியின்மை போன்ற பல கேடுகளை இந்திய சமுதாயத்தில் உருவாக்கும் நிலை ஏற்படும்”**

என்று குறிப்பிட்டு இருந்தார்.

இந்தச் சட்டம் தனிநபர் உரிமையான எந்த மதத்தையும் பின்பற்றுதல், வாரிசுரிமை, தத்தெடுத்தல் போன்றவற்றில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 25 வழங்கியுள்ள உரிமைகளைப் பறிப்பதற்கும், பிரிவு-29 வழங்கியுள்ள சிறுபான்மை யினருக்கான உரிமைகளைப் பறிப்பதற்குமான முயற்சியாகும். அரசமைப்புச் சட்டப் பிரிவு - 29, இந்திய நிலப் பரப்பில் வாழும் ஒவ்வொரு குழுவினருக்கும், அவர்களுடைய மொழி, எழுத்து, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமையை அளித்துள்ளது. அதற்கு இது விரோதமானது.

இந்திய அரசியலமைப்பின் 371 ஆவது பிரிவின் கீழ் பல்வேறு இந்திய யூனியன் மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் xxi மற்றும் xxii பாகங்களில் காணக்கூடிய இந்திய அரசியலமைப்பின் பிரிவு 371 ஆவது பிரிவானது, நாட்டுக்குள் சில மாநிலங்களுக்கு பல தற்காலிக இடைநிலை மற்றும் விதிவிலக்கான விதிகளை வழங்குகிறது.

இச்சட்டமானது குஜராத், மகாராஷ்டிரா, நாகலாந்து, மிசோரம், அசாம், ஆந்திரப்பிரதேசம், சிக்கிம், மணிப்பூர், அருணாசலப்பிரதேசம், கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளை வழங்குகிறது. இது அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 371A முதல் 371J வரையிலான பிரிவுகளாக அமைந்துள்ளது.

இதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால்...‘இந்த மாநிலங்களின் வளர்ச்சியடையாத பகுதிகளின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுவது, அவர்களின் பொருளாதார மற்றும் பண்பாட்டு நலன்களைப் பாதுகாப்பது, உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்ப்பது, அவர்களின் வழக்கமான சட்டங்களைப் பாதுகாப்பது’ என்றே சொல்லப்படுகிறது. அதாவது அந்தந்த மாநிலங்களுக்காக சிறப்பாக உருவாக்கப் பட்ட சட்டப்பிரிவுகள் இவை.

★ 371 ஆவது பிரிவில் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் விதர்பா, மராத்வாடா, கட்ச் உள்ளிட்ட மராத்திய மொழி பேசும் பகுதிகளில் சமச்சீரற்ற வளர்ச்சியை உறுதி செய்வதற்கான சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்ள அனுமதி தரப்பட்டுள்ளது.

★ 371ஏ - நாகலாந்து தொடர்பான சிறப்பு விதிகள் செய்து தரப்பட்டுள்ளது. நாகர்களின் மதம் அல்லது சமூக நடைமுறைகள், பாரம்பர்யங்கள், மரபுகள் ஆகியவற்றை வைத்து சிவில் மற்றும் குற்றவியல் நீதி நிர்வாகங்களை வடிவமைத்துக் கொள்ளலாம்.

★ 371 பி -அசாம் மாநிலத்துக்கு சிறப்புரிமை தரப்பட்டுள்ளது. அது பழங்குடியினப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்கிறது.

★ 371 சி - மணிப்பூருக்கான ஏற்பாடுகள் இப்பிரிவில் உள்ளன.

★ 371 டி- ஆந்திரா, தெலுங்கானா குறித்த பிரிவுகள் இவை. உள்ளூர் மக்களின் கல்வி, வேலை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இது உருவாக்கித் தரப்பட்டது.

★ 371 எஃப் - சிக்கிம் மாநிலத்துக்கான ஏற்பாடுகள்.

★ 371 ஜி - மிசோரம் மாநிலத்துக்கான ஏற்பாடுகள் ஆகும். மிசோரம் மக்களின் மதம் மற்றும் சமூக நடைமுறைகள் தொடர்பாக மிசோரம் மாநில சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் வரை நாடாளுமன்றம் நிறைவேற்றும் ஒரு சட்டம் அந்த மாநிலத்துக்குப் பொருந்தாது என்று இந்தப் பிரிவு உரிமை வழங்குகிறது. சிவில் மற்றும் குற்றவியல் நிர்வாகம் ஆனது மிசோ மரபுச் சட்டத்தின் முடிவுகளை உள்ளடக்கியே இருக்கிறது. 371 எச் - அருணாசலப் பிரதேசத்துக்கான சிறப்பு ஏற்பாடுகள் அடங்கிய பிரிவு இது.

★ 371 ஐ - கோவாவுக்கான ஏற்பாடு.

★ 371 ஜே - கர்நாடகாவுக்கான ஏற்பாடு. பின்தங்கிய பகுதிகளை வளர்க்க உரிமை வழங்குகிறது.

- இவை எல்லாம் மாநிலங்களுக்கான தனியாகச் செய்யப்பட்ட சிறப்புச் சட்டங்கள் ஆகும். இதில் கை வைக்க தைரியம் உண்டா? பொதுவான நாட்டில் மாநிலங்களுக்கு ஏன் சிறப்புச் சட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? அதை மாற்ற முடியுமா?

“பொதுவான நாட்டில் பெண்களுக்கு ஏன் சிறப்புச் சலுகைகள்? பட்டியலின பழங்குடியினருக்கு ஏன் தனி ஒதுக்கீடு? பிற்படுத்தப்பட்டவர்க்கு ஏன் தனி ஒதுக்கீடு?” என்று கேட்பீர்களா? சிறுபான்மையினரை மட்டும் குறி வைப்பது ஏன்?

**மதச்சார்பற்ற நாட்டில் குறிப்பிட்ட மதப்பிரிவினரை மட்டும் குறி வைப்பது சட்டவிரோதம் இல்லையா?**

●●



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தென்னக அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கூட்டமைப்பின் மாநில தலைவர் எஸ். செங்குட்டுவன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சமூகநீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான் பேரவையின் தலைவர் வடிவேல் ராமன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

## இலங்கை சிறையில் உள்ள அனைத்து

# மீனவர்களையும் - மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, மார்ச் 23-

இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை செய்திடவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி 21-3-2024 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும், அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளைச் செய்திடவும் வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (22-3-2024) கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் அண்மைக் காலமாக தொடர்ந்து கைது செய்யப்படுவது ஆழ்ந்த வேதனையை அளிப்பதாகவும், கடந்த சில வாரங்களாக பல்வேறு சம்பவங்களில் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது, அவர்களது குடும்பத்தினரிடையேயும், மீனவ சமூகத்தினரிடை யேயும் பெருத்த மன உளைச்சலையும், நிச்சயமற்ற சூழலையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் வேதனையோடு குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 21-3-2024 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதையும், அவர்களது 5 விசைப்படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினையில் தாமதம் ஏதுமின்றி தீர்வு காண, தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கை நீதிமன்றங்களில் தண்டனை பெற்று, இலங்கை சிறைகளில் வாடும் மீனவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்கிடவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இலங்கைச் சிறைகளில் வாடும் மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை உறுதி செய்திடவும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி

# ‘இந்தியா’ கூட்டணியின் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

சென்னை, மார்ச் 23-

தென் சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட தி.மு.க. தலைமையிலான ‘INDIA’ கூட்டணியின் அனைத்துக்கட்சிகளின் கலந்துரையாடல் கூட்டம் நேற்று (22.3.2024) சைதாப்பேட்டை எஸ்.பி.எஸ் திருமண மண்டபத்தில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் மயிலை ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. தென் சென்னை நாடாளுமன்ற வெற்றி வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களை அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ஜெ.கருணாநிதி, தொகுதி பொறுப்பாளர்கள் கோ.வி.லெனின், கன்னிகை ஸ்டாலின், பழ.செல்வகுமார், வி.பி. கலைராஜன், கே.எஸ். ரவிச்சந்திரன், ப.அப்துல் மாலிக், துணை மேயர் மு. மகேஷ்குமார், பகுதி கழக செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், கே.கண்ணன், மு.ராசா, சு.சேகர், துரை. கபிலன், வி.இ. மதியழகன், ஒன்றிய கழக செயலாளர் வெங்கடேசன், இ.தே.கா. முத்தழகன், அடையார் துரை, ம.தி.மு.க. பா.சுப்பிரமணி கழக குமார் வி.சி.க. கரிகால் வல்லவன், இளையா, வழக்கறிஞர் சாரணத், சி.பி.ஐ. சிவா நல்லகண்ணு, இ. கருணாநிதி,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேல்முருகன், மக்கள் நீதி மையம் சண்முகம், பாலமுருகன், சினேகா, பிரவீன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, முத்துராஜ், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சி செல்வம், ஆம் ஆத்மி கட்சி வினோத்குமார் மணிகண்டன், இந்தியா முஸ்லிம் லீக், பீர்முகமது, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் முகமது ஜின்னா, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் பிஸ்மில்லா கான், யூஸ் ஆஃப், கிறிஸ்துவ நல்லிணக்க பேரவை மேத்தீஸ், தமிழ் மாநில தேசிய லீக் திருவான்மியூர் ஹாஜா, முக்குலத்தோர் புலிப்படையின் மூர்த்தி, திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாவட்ட கார்த்திக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# பா.ஜ.க.வினர் ஒவ்வொருவருக்கும் சொல்கிறேன்... உங்கள் ஆணவம் தான் பா.ஜ.க.வை வீழ்த்தப் போகிறது!

## திருச்சி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி!

திராவிட மாடல் ஆட்சியில் மூன்று ஆண்டுகளாக, மக்களாகிய உங்களுக்காகச் செய்த சாதனைகளின் பட்டியல் சொல்லவா! சொன்னால் இன்றைக்கு ஒரு நாள் போதாது! முக்கியமான சில திட்டங்களுடைய பயன்களைப் பற்றி, நான் சொல்வதை விட, தமிழ்நாட்டு மக்கள் என்ன சொல்கிறார்கள் என்று நேற்று ஒரு வீடியோ பார்த்தேன்.



திருச்சிராப்பள்ளி, சிறுகனூரில் நேற்று (22.3.2024) நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார முதல் பொதுக் கூட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### எங்கள் அண்ணன் வழங்கும் ரூ. 1000 சகோதரியின் நெகிழ்ச்சி வீடியோ!

அதில், ஒரு மகளிர் சொல்கிறார்: எங்கள் வீட்டில், குழந்தைகளுக்கு உடம்பு சரியில்லை என்றால், காசுக்காக யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இனிமேல் இல்லை. எங்கள் அண்ணன் ஸ்டாலின் கொடுக்கும், 1000 ரூபாய் தாய் வீட்டுசீர் இருக்கிறது! இப்படி மாதா மாதம், மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 15 லட்சம் குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!

அடுத்தது, விடியல் பயணத் திட்டம் பற்றிப் பேசுகிறார்கள்! ஸ்டாலின் சார் பேருந்தில் சென்று, நான்கு மாதம் இலவசமாக பயணம் செய்து கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்து, இப்போது வேலைக்குச் செல்கிறேன் என்று காஞ்சிபுரம் மாவட்ட சகோதரி ஒருவர் மகிழ்ச்சியுடன் கூறினார், இது போல், மாநிலம் முழுவதும் இதுவரையில் மகளிர் மட்டும், 445 கோடி முறை பயணம் செய்து இருக்கிறார்கள்!

அடுத்து, திருப்பூர் மாணவி ஒருவர் பேசுகிறார்! ஏழ்மையான சூழலில் அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக்கு வந்த எனக்கு, அப்பா

**தன் ஆட்சி முடியப் போகிறது என்ற பதற்றத்தில் பிரதமர் மோடிக்கு தூக்கம் வரவில்லை! தோல்வி பயம் வந்து விட்டது!**

போல், ஸ்டாலின் அய்யா 1000 ரூபாய் தருகிறேன் என்று கூறினார்கள், இப்படி மாநிலம் முழுவதும் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் புதுமைப் பெண் திட்டம் மூலமாக பயனடைகிறார்கள்!

### காலை உணவுத் திட்டத்தை மகிழ்ச்சி பொங்க கூறும் சிறுமி!

அடுத்த வீடியோவில், எப்போதாவதுதான் வீட்டில் சாப்பிடுவேன் காலையில் அம்மா வேலைக்குச் சென்று விடுவார்கள்.. நான் பள்ளிக்குச் சென்றுவிடுவேன் இப்போது பள்ளியிலேயே ஸ்டாலின் தாத்தாவினுடைய காலை உணவு திட்டத்தில் சாப்பிடுகிறேன் என்று, தொலைக்காட்சியில் சிரித்துக் கொண்டே ஒரு குழந்தை பேட்டி கொடுத்தது! அது போல் தமிழ்நாடு முழுவதும் 16 இலட்சம் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறார்கள்!

அடுத்து, கொரோனா காலத்தில் பள்ளிக்கு செல்லாமல் ஏற்பட்ட இடைவெளியினால், பத்து வரைக்குமான எண்களைக்கூட மறந்துவிட்டு இருந்த குழந்தைகள், இப்போது எண்கள், எழுத்துக்களை நன்றாக வாசிக்கிறார்கள் என்று, தன்னார்வலர் ஒருவர் கூறினார்! அதற்குக் காராணமான இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் இதுவரைக்கும் 24 இலட்சத்து 86 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்து இருக்கிறார்கள்.

மற்றொரு கல்லூரி படிக்கும் தம்பி பேசுகிறார்! வேலைக்காக, நாங்கள் கூடுதல் படிப்புகள் படிக்க வேண்டும் என்றால், பயிற்சி மையங்களுக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டும்! ஆனால், இலட்சங்களைச் செலுத்திப் படிக்க வேண்டிய அந்த படிப்புகளை எங்களுக்கு, நான் முதல்வன் திட்டத்தில் இலவசமாக கற்றுக் கொடுத்ததால் வேலை கிடைத்திருக்கிறது என்று அந்தத் தம்பி கூறினார்.

இப்படி இரண்டு ஆண்டுகளில், 28 இலட்சம் இளைஞர்கள் நான் முதல்வன் திட்டத்தில் பலன் அடைந்திருக்கிறார்கள்!

### மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தால் 1 கோடி பேர் பயன்!

அடுத்தது, மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்! மாற்றுத் திறனாளியான எனக்கு, குறைந்த வருமானம்தான்! ஆனால், வீடு தேடி வந்து சுகர் – பி.பி. பரிசோதனைகள் எடுத்து, மருந்து மாத்திரைகள் கொடுப்பதால் மாதம் ஆயிரம் – இரண்டாயிரம் என்று மிச்சம் ஆகிறது என்று சேலத்தைச் சேர்ந்த சகோதரர் கூறியது போல், தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டத்தில் ஒரு கோடி பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

கடைசியாக, கும்பக்கோணத்தைச் சேர்ந்த ஒருவர் கூறுகிறார்! மக்களுடன் முதல்வர் திட்டத்தினால், 35 ஆண்டுகளாக முடியாத பட்டா மாற்றம், மூன்றே நாட்களில் முடிந்துவிட்டது என்று நன்றி தெரிவித்தார்! இப்படி தமிழ்நாட்டில் இருக்கின்ற, அனைத்துக் குடும்பத்திற்கும் பார்த்து பார்த்து அவர்களின் குடும்பத்தில் ஒருவனாக பல திட்டங்களைத் தீட்டி தருபவன்தான், இன்று உங்கள் முன்னால் கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

மாநிலத்தை ஆளும் நாங்கள்தான், முடியாத நிதி நெருக்கடியிலும், இவ்வளவு செய்திருக்கிறோமே, நீங்கள் என்ன என்ன சிறப்புத் திட்டங்களை தமிழ்நாட்டிற்கு செய்திருக்கிறீர்கள் என்று பிரதமரிடம் கேட்டால் சென்னை – தூத்துக்குடி வெள்ளப் பாதிப்புக்கு ஏன் நிதி தரவில்லை என்று பிரதமரிடம் கேட்டால் – எய்ம்ஸ் மருத்துவமனையை ஏன் கட்டவில்லை என்று பிரதமரிடம் கேட்டால் – புதிய இரயில்வே திட்டங்கள் எங்கே என்று பிரதமரிடம் கேட்டால் – இங்கு இருக்கின்ற ஒன்றிய அரசு பணிகளில் ஏன் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை என்று கேட்டால் – எதற்காவது அவரிடம் சரியான பதில் இருக்கிறதா?

### திட்டங்களைச் சொல்ல முடியாமல் தேவையற்றதைப் பேசுகிறார் மோடி!

அவருடைய தோல்விகளை மறைக்க, மாநில உரிமைகளைப் பறிப்பதை மறைக்க, தமிழ்மொழியைப் புறக்கணித்ததை மறைக்க, தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டதை மறைக்க, மொத்தத்தில், உண்மையான மக்கள் பிரச்சினைகளை மறைக்க, தேவையில்லாத விஷயங்களை எல்லாம் பேசி, திசைதிருப்புகிறார்!

**மூன்றாண்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளைச் சொல்கிறோம்! பத்தாண்டு மோடி ஆட்சியின் சாதனைகளைச் சொல்ல முடியுமா?**

தேர்தலுக்குத் தேர்தல் நீங்கள் நடத்துகிற கபட நாடகங்களை, இனித் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்திய மக்களும்கூட நம்ப மாட்டார்கள்! உங்களை மன்னிக்கவும் மாட்டார்கள்! மாநிலம் முழுவதும் செய்த திட்டங்களை நான் பட்டியலிட்டேன். நலத்திட்டங்கள் மட்டுமல்ல, இந்த மாவட்டங்களுக்கு என்று செய்த – செய்து கொண்டிருக்கின்ற – வளர்ச்சித் திட்டங்களையும் சொல்லவா? சிலவற்றை மட்டும் சொல்கிறேன்!

350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சியில் ஒரு மிகப்பெரிய பேருந்து முனையம் மற்றும் கனரக வாகன சரக்கு மையம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

142 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணப்பாறையில் உணவுப் பூங்கா, நவல்பட்டில் தகவல் தொழில்நுட்ப மையம், பஞ்சப்பூரில் 410 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பார்க், 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சியில் மகாத்மா காந்தி நினைவு அரசினர் மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் ஆகிய பணிகள் வேகமாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்னும் பல திட்டங்கள் குறிப்பாக, திருச்சியில் இளைஞர்களுக்காக உலகத்தரத்தில் ஒரு ஒலிம்பிக் அகாடமி, புதுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம், 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கரூர் பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகள் என்று பட்டியல் நீளமாக இருக்கிறது!

### தேர்தல் அறிக்கையில் நாம் சொல்லியுள்ள திட்டங்கள்!

அடுத்து, இங்கு நம்முடைய வேட்பாளர் தம்பி துரை வைகோ அவர்கள் சொன்னது போல, நேற்று முன்தினம் வெளியிட்ட தேர்தல் அறிக்கை பற்றியும் கூறவேண்டும். அதிலும் சிலவற்றை தலைப்பு செய்திகளாக சொல்கிறேன். கடந்த பத்தாண்டுகளாக பா.ஜ.க. அரசு இஷ்டத்திற்கு ஏற்றிய பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் சிலிண்டர் விலை குறைக்கப்படும். தமிழ்நாட்டு ஏழைஎளிய மாணவர்களின் உயிரை பழிவாங்கும் நீட் தேர்வு ஒழிக்கப்படும். மாநிலங்களுடைய உயிர்மூச்சாக இருக்கின்ற நிதி உரிமைக்கு வேட்டு வைக்கும், தற்போதைய ஜி.எஸ்.டி முறை சீர்திருத்தம் செய்யப்படும். சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும். ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற பேரில் ஜனநாயகத்துக்குச் சவக்குழி தோண்டும் முயற்சி நிறுத்தப்படும். உலகப் பொதுமறையான திருக்குறள், தேசிய நூலாக அறிவிக்கப்படும். ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகள், ஒன்றிய அலுவலகங்களில் தமிழ் மொழியில் பயின்ற நமது இளைஞர்களுக்கு இடம் உறுதிசெய்யப்படும். அதுமட்டுமல்ல, இந்த பகுதி மக்களுக்காக பொன்மலை இரயில்வே பணிமனையை இரயில் பெட்டித் தொழிற்சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். ஆத்தூர் இரயில் நிலையம் முதல் பெரம்பலூர், அரியலூர் ரயில் நிலையம் வரை, புதிய அகல இரயில் பாதை அமைக்க ஆவன செய்யப்படும்.

### மக்கள் நலத் திட்டங்களை பார்த்துப் பார்த்து செயல்படுத்துகிறோம்!

நம்முடைய அமைச்சர் தம்பி மகேஷ் அடிக்கடி கோரிக்கை வைக்கும், தேசிய நெடுஞ்சாலையில் பால்பண்ணை முதல் துவாக்குடி வரை உயர்மட்டச் சாலை அமைக்கப்படும். அது மட்டுமல்ல, தேர்தல் அறிக்கையில் சொல்லாத ஒன்றையும் இங்கு வாக்குறுதியாக கொடுக்க விரும்புகிறேன். அந்த உயர்மட்டச் சாலை அமைக்கப்படுவதோடு அணுகு சாலையும் அமைக்கப்படும். இப்படி, மக்களுக்கான திட்டங்களை சிந்தித்து செயல்படுத்த பாடுபடுபவர்கள் தான் நாம்!

ஆனால், தமிழ்நாட்டில் சொல்வதற்கென்று, எதுவுமே இல்லாத ஆட்சியை நடத்தியவர்தான் பிரதமர் நரேந்திர மோடி! அவரால் சாதனைகளை சொல்ல முடியவில்லை! மேடைக்கு மேடை என்ன சொல்கிறார்! பத்தாண்டு நான் ஊழலற்ற அரசாங்கத்தை நடத்தினேன் என்று சொல்கிறார்! பா.ஜ.க. ஆட்சியில் நடந்த ஊழல்கள் பற்றி, நாம் மட்டுமல்ல நாடு முழுவதும் கேள்வி கேட்டாலும் அவரால் பதில் சொல்ல முடியவில்லை!

**இந்தியாவிற்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கக் காத்திருக்கும் இந்தியா கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களிப்பீர் என்று உங்களில் ஒருவனாக உங்களுக்காகவே உழைத்த தலைவர் கலைஞரின் மகனாகக் கேட்டுக் கொள்கிறேன். திருச்சி மற்றும் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அறிமுகம் செய்ய விரும்புகிறேன்**

**இதோ திருச்சி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராக, ஈழத் தமிழர்களுக்காகச் சிறை பல கண்ட, திராவிட இயக்கத்தின் போர்வாள், என் ஆருயிர் அண்ணன் வைகோ அவர்களின் மகன் துரை வைகோ அவர்களையும் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராக, திருச்சியைத் தீரர்களின் கோட்டையாக உருவாக்கிய உழைப்பின் அடையாளம் என் ஆருயிர் சகோதரர் கே.என்.நேரு அவர்களின் மகன் அருண் நேரு அவர்களையும் – உங்களிடத்தில் ஒப்படைக்கிறேன்.**

### ரூ. 7 லட்சம் கோடி ஊழல் முறைகேடு! பா.ஜ.க. பதில் சொல்லவில்லை!

இந்தப் பத்தாண்டு ஆட்சியில், ஊழல்கள் ஒன்றா இரண்டா! அதற்கு, இமாலய எடுத்துக்காட்டுதான் இந்திய ஜனநாயகத்திற்கே அழிக்க முடியாத அவமானத்தை ஏற்படுத்தியிருக்கும் தேர்தல் பத்திர ஊழல்! கடந்த 5 ஆண்டுகளில் ED – I.T – C.B.I – இப்படிப்பட்ட ஒன்றிய அரசின் அமைப்புகளை பா.ஜ.க.வின் கைப்பாவையாகப் பயன்படுத்தி, அவர்களை ரெய்டிற்கு அனுப்புவது, பிறகு பா.ஜ.க.வுக்கு நிதியாகத் தேர்தல் பத்திரங்களை வாங்குவது என்று, 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்திருக்கிறார்கள்.

வரலாற்றிலேயே இப்படி ஒரு வசூல் நடந்ததில்லை! அதுமட்டுமா, சி.ஏ.ஜி அறிக்கையில் வந்ததே! பாரத்மாலா திட்ட ஊழல், துவாரகா விரைவுப் பாதைக் கட்டுமானத் திட்ட ஊழல், சுங்கச்சாவடி கட்டண ஊழல், ஆயுஷ்மான் பாரத் திட்ட ஊழல், ஓய்வூதியத் திட்ட ஊழல், எச்.ஏ.எல். விமான வடிவமைப்புத் திட்ட ஊழல் என்று 7 இலட்சம் கோடி ரூபாய்க்கு முறைகேடு நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை வெளியிட்டிருக்கிறது!

அந்த அறிக்கை மேல் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்றிய அரசு, அது பற்றி வாய் திறக்கவில்லை! தேர்தல் பத்திரம் போலவே மற்றொரு நிதியும் வசூல் செய்திருக்கிறார்! அதுவும் 'பி.எம். கேர்ஸ் ஃபண்ட்' என்று பேர் வைத்து வசூல் செய்திருக்கிறார்! அது பற்றிய அத்தனை இரகசியங்களும் ஜூன் மாதம் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், அம்பலமாகும்!

அதேபோல், ரஃபேல் ஊழல் ரகசியமும் நிச்சயமாக வெளியே வரும்! இப்படிப்பட்ட ஊழல் ஆட்சியை நடத்திய பிரதமர் மோடி ஊழலைப் பற்றி பேசலாமா? பா.ஜ.க. ஊழல்களை மறைக்க, நேற்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலைக் கைது செய்திருக்கிறார்கள். என்ன காரணம்? பா.ஜ.க.வின் தோல்வி பயம்தான் ஒரே காரணம்!

டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியாவைக் கைது செய்து, 13 மாதங்களாகச் சிறையில் இருக்கிறார். சென்ற மாதம் ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்கள் கைது செய்யப்படுகிறார். இப்போது அரவிந்த் கெஜ்ரிவால்! அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கை இல்லையா இது?

தனக்கு எதிராக 'இந்தியா' என்ற வலிமையான கூட்டணியை எதிர்க்கட்சிகள் அமைத்து விட்டார்களே மக்கள் பா.ஜ.க.வுக்கு எதிராக ஒன்று திரள ஆரம்பித்துவிட்டார்களே என்ற பயத்தில், தவறுகளுக்கு மேல் தவறுகளை செய்துகொண்டு வருகிறது, பா.ஜ.க. தலைமை!

தமிழ்நாட்டில் நம்முடைய ஆட்சிக்கு தொந்தரவு கொடுக்க, ஆளுநரை வைத்து மிரட்டிப் பார்க்கிறார்கள்.

### ஆளுநர் நடத்திய அரசியல் உச்சநீதி மன்றத்தில் நமதுவாதம்!

இந்த நிகழ்ச்சிக்குப் புறப்படுவதற்கு முன்பாக, நம்முடைய அமைச்சர் பொன்முடியின் பதவிப் பிரமாண நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு நான் வந்திருக்கிறேன்.

ஆளுநர் அவராகச் செய்தாரா! முடியாது என்று சொல்லிவிட்டார். நாங்கள் விடுவோமா தி.மு.க.காரர்கள் நாங்கள். நீதிமன்றத்திற்குச் சென்றோம். உச்சநீதிமன்றத்தில் வாதம் நடந்தது. எப்படிப்பட்ட கண்டனத்தை ஆளுநருக்கு தெரிவித்திருக்கிறார் தலைமை நீதிபதி!

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# கள்ளக் கூட்டணி நடத்தும் எடப்பாடி பழனிசாமி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதற்குப் பிறகு, இன்றைக்கு மாலை 3.30 மணிக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு நாங்கள் நேரடியாகச் சென்று ராஜ்பவனில் பதவிப் பிரமாணத்தை முடித்துவிட்டு, ஒரு மரியாதைக்கு ஆளுநரிடம் பூங்கொத்தைக் கொடுத்துவிட்டு, புறப்படும்போது கூறினேன். இன்றைக்குத்தான் நான் தேர்தல் வேலையைத் தொடங்குகிறேன். தேர்தல் பிரச்சாரத்தை முதன்முதலாக ராஜ்பவனிலிருந்து தொடங்குகிறேன் என்று கூறினேன். அவர் உடனே, BEST OF LUCK என்று சொல்லி அனுப்பினார்.

**ராஜ்பவனிலிருந்து எனது பிரச்சாரம் குடியரசுத் தலைவர் மாளிகை வரைச் செல்லும்!**

ராஜ்பவனிலிருந்து தொடங்கியிருக்கின்ற இந்தப் பயணம் குடியரசுத்தலைவர் மாளிகை வரைக்கும் செல்லப்போகிறது என்பது இது ஒரு அடையாளம்.

மக்களுக்கான சட்டங்களை நிறைவேற்றினால், அதற்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் நிறுத்துவார். நாம் ஒவ்வொரு முறையும் உச்சநீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்.

நேற்றும், இன்றைக்கும் போல், வரலாற்றில் வேறு எந்த ஆளுநரையாவது நீதிமன்றம் இப்படி கடுமையான கேள்விகள் கேட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட கேள்விகளை உச்சநீதிமன்றம் கேட்டிருக்கிறது. மக்களை எதிர்கொள்ள பயப்படும் பா.ஜ.க. அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறை போன்ற புலனாய்வு அமைப்புகள் மூலமாகவும், ஆளுநர்கள் மூலமாகவும் எதிர்கொள்வது கோழைத்தனம்! கோழைத்தனம்!

**பாசிச பா.ஜ.க.வுடனான யுத்தத்தில் இந்திய மக்கள் வெற்றி பெறுவார்கள்!**

உங்களின் இந்த மிரட்டல் உருட்டல் அரசியலை மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இது இந்தியா கூட்டணிக்கும் பாஜகவுக்குமான யுத்தம் அல்ல. இது இந்திய நாட்டு மக்களுக்கும் பாசிச பா.ஜ.க.வுக்குமான யுத்தம்! இந்த யுத்தத்தில் மக்கள்தான் வெற்றி பெறுவார்கள். பாசிச பா.ஜ.க. வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்தப்படும்.

இந்திய மக்கள் இப்போது இந்தியா கூட்டணியின் பக்கம் அணி திரண்டுவிட்டார்கள்! பிரதமர் அவர்களே! இந்தியா கூட்டணி மாபெரும் வெற்றி! வெற்றி! வெற்றி! என்று ஜூன் 4ஆம் தேதி வரவிருக்கும் செய்தி உங்கள் தூக்கத்தைத்தான் தொலைக்கப் போகிறது!



திருச்சி – பெரம்பலூர் தொகுதிகளின் இந்திய கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திருச்சி சிறுகனூரில் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு முன்பாக தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு தலைவர்– முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நான் கேட்பது, தமிழ் மீதும் தமிழ்நாட்டின் மீதும் தமிழர்களின் மீதும் உங்களுக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு? தமிழ்நாட்டுக்கு விரோதமாக எல்லாவற்றையும் செய்துவிட்டு, தமிழ்தான் மூத்தமொழி என்று பிரதமர் மோடி நீலிக்கண்ணீர் வடிக்கலாமா? சமஸ்கிருத வளர்ச்சிக்கு நீங்க கொடுத்த நிதி எவ்வளவு? தமிழ் வளர்ச்சிக்குக் கொடுத்த நிதி எவ்வளவு? இதை கூச்சமில்லாமல் தமிழ்நாட்டுக்கு வந்து கூறுவாரா அவர்?

நீங்கள் வளர்க்கின்ற வெறுப்புத் தீ என்ன செய்கிறது என்று தெரியுமா? ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் ஒருவர், பெங்களூரில் வெடித்த குண்டு தமிழர்கள் வைத்த குண்டு என்று சொல்கிறார். தமிழர்களை வன்முறையாளர்களாக – பயங்கரவாதிகளாக சித்தரிக்கப் பார்க்கிறது பா.ஜ.க.

**மக்களிடமிருந்து சுரண்டும் பா.ஜ.க. மக்களுக்கு வாரி வழங்குவது நாம்!**

தமிழ்நாட்டு மக்களை எப்படியெல்லாம் கொச்சைப்படுத்தி பேசலாம் என்பதில்தான், பா.ஜ.க.வை சேர்ந்தவர்களின் எண்ணம் முழுவதும் இருக்கிறது. பா.ஜ.க. மக்களிடமிருந்து சுரண்டுமே தவிர, மக்களுக்கு எதுவுமே தராது! அதனால்தான், மக்கள் இயற்கை பேரிடரில் பாதிக்கப்படும்போது, நம்முடைய நிதியில் இருந்தே நாம் தருகிறோம். அதையும் மனச்சாட்சியே இல்லாமல் கொச்சைப்படுத்தி, அதில் ஆனந்தம் அடைவது என்ன மாதிரியான அரசியல்?

தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான நிதியை வரியாக வசூல் செய்கிறீர்கள்! அதிலிருந்து நியாயமான பங்கை ஏன் திருப்பிக் கொடுப்பதில்லை என்றுதானே கேட்கிறோம்! ஒரு ரூபாய் வசூல் செய்துவிட்டு, 29 பைசா மட்டும் திருப்பி கொடுப்பது நியாயமா? முறையா? தருமமா? என்று கேட்கிறோம்!

இதைக் கேட்டால், சில நாட்களுக்கு முன்னால் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆணவமாகச் சொல்கிறார்! மக்களுக்கு நிவாரணம் வழங்குவது பிச்சையாம்! எவ்வளவு ஆணவம்!

எவ்வளவு வாய்க் கொழுப்பு! நிர்மலா சீதாராமன் அவர்களே உங்கள் அரசியலுக்காக தமிழ்நாட்டு மக்களை கொச்சைப்படுத்துவீர்களா? பாதிக்கப்பட்ட மக்களை அவமானப்படுத்துவீர்களா? மக்களுக்குக் கொடுப்பது எதுவுமே பிச்சை அல்ல; அது அவர்களின் உரிமை!

மக்கள் பாதிக்கப்படுகிறபோது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது, அரசியலில் இருக்கும் நம்முடைய கடமை! அந்தக் கடமையைத்தான் தி.மு.க. அரசு சரியாக செய்துகொண்டு இருக்கிறது. கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு பல லாயிரம் கோடி தள்ளுபடி செய்கிறீர்களே தொழிலதிபர்கள் கூட்டத்தில் சென்று இப்படி பேசுவீர்களா?

**மக்களுக்கு உதவமுடியாதவருக்கு நிதியமைச்சர் பதவி எதற்கு!**

ஏழைகள் என்றால் அவ்வளவு இளக்காரமா? ஒரு ரூபாய்க்கு பொருள் வாங்கினால்கூட வரி கட்டுகிறார்களே மக்கள் அவர்கள் பாதிக்கப்படும்போது அரசாங்கம் உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறா? மக்களுக்கு உதவ முடியவில்லை என்றால் எதற்கு நிதி அமைச்சர் பதவி?

பா.ஜ.க.வில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் சொல்கிறேன் உங்களுடைய இந்த ஆணவம்தான் பா.ஜ.க.வை வீழ்த்தப் போகிறது! இப்படிப்பட்ட எதேச்சாதிகார சர்வாதிகார பா.ஜ.க.வைத் தமிழ்நாட்டில் இருக்கிற பழனிசாமி கண்டிக்கிறாரா? நம்மைப் போல் விமர்சனம் செய்கிறாரா? எங்காவது கண்டித்து அறிக்கை விடுகிறாரா?

குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு சிறுபான்மையினர் நலன் பேசுகிறார் பழனிசாமி! அவரின் இருண்ட கால ஆட்சியை நீங்கள் எல்லாம் மறந்துவிட்டு இருப்பீர்கள் என்று தப்புக்கணக்கு போடுகிறார் பழனிசாமி!

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு கொடநாடு கொலை – கொள்ளை, தற்கொலை – மர்ம மரணங்கள் பொள்ளாச்சி பாலியல் வன்முறை என்று பழனிசாமி ஆட்சியின் அவலங்கள் என்று நீண்ட பட்டியலே போடலாம்! ஊழல் கறை படிந்த அவரின் கரங்களை காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து, பா.ஜ.க.விற்கு பாதம்தாங்கியாக இருந்து, பா.ஜ.க. தமிழ்நாட்டுக்குச் செய்த அத்தனை துரோகங்களுக்கும் துணை நின்று, அதற்கு லாலி பாடியவர் பழனிசாமி!

இப்போது அதே பா.ஜ.க.வின் கதை – திரைக்கதை – வசனம் – டைரக்‌ஷனில் கள்ளக் கூட்டணி நாடகத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார். பழனிசாமி நடத்தும் நாடகம் விரைவில் முடிவுக்கு வரும்! பா.ஜ.க.வின் பாசிச எண்ணங்களுக்கும் முடிவுரை எழுதப்படும்!

இதெல்லாம் நடப்பதற்கு, நம்முடைய இந்தியா கூட்டணி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்க வேண்டும்! அப்போதுதான், நம்முடைய இந்திய நாட்டையும் – இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் நாட்டின் பன்முகத் தன்மையையும் – சகோதரத்துவத்தையும் காப்பாற்ற முடியும்!

இந்தியாவிற்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கக் காத்திருக்கும் இந்தியா கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களிப்பீர் என்று உங்களில் ஒருவனாக உங்களுக்காகவே உழைத்த தலைவர் கலைஞரின் மகனாகக் கேட்டுக் கொள்கிறேன். திருச்சி மற்றும் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அறிமுகம் செய்ய விரும்புகிறேன்

இதோ திருச்சி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராக, ஈழத் தமிழர்களுக்காகச் சிறைபல கண்ட, திராவிட இயக்கத்தின் போர்வாள், என் ஆருயிர் அண்ணன் வைகோ அவர்களின் மகன் துரை வைகோ அவர்களையும் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராக, திருச்சியைத் தீரர்களின் கோட்டையாக உருவாக்கிய உழைப்பின் அடையாளம் என் ஆருயிர் சகோதரர் கே.என்.நேரு அவர்களின் மகன் அருண் நேரு அவர்களையும் – உங்களிடத்தில் ஒப்படைக்கிறேன்.

அவர்களுக்குப் பெருவாரியான வாக்குகளை அளித்து, உங்களுடைய குரலாக – உங்களுடைய பிரதிநிதிகளாக இந்த இரண்டு இளம் சிங்கங்களையும், நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய ஜனநாயகக் கடமை உங்களுக்கு இருக்கிறது.

இந்தியாவைக் காக்கும் வெற்றிப் பயணத்தை திருச்சியில் இருந்து தொடங்குகிறேன். புதிய ஆட்சியை ஒன்றியத்தில் அமைப்போம்! ஒளிமயமான இந்தியாவை உருவாக்குவோம்! ஏப்ரல் 19ஆம் நாள் நீங்கள் அளிக்கின்ற வாக்கு புதிய இந்தியாவை உருவாக்கும் வாக்காக அமையட்டும். திருச்சியில் வெற்றி வரலாறு துவங்கட்டும்! துவங்கட்டும்! துவங்கட்டும்! இவ்வாறு தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### “தேர்தல் நேரத்தில்

# எந்தக் கைது நடவடிக்கையும் கூடாது!

## இந்தியா கூட்டணி சார்பில் தேர்தல் ஆணையத்தில் புகார்!

புதுடெல்லி,மார்ச்.23-

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டது தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையத்தில் இந்தியா கூட்டணி சார்பில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் மதுபான கொள்கையில் ஊழல் நடந்திருப்பதாகக் கூறி டெல்லி முதலமைச்சரும் ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவாலை, விசாரணைக்கு ஆஜராகுமாறு அமலாக்கத்துறை 9 முறை சம்மன் அனுப்பியது. ஆனால், அமலாக்கத் துறையின் சம்மன் சட்ட விரோதமானது என்று கூறி அரவிந்த் கெஜ்ரிவால் ஆஜராக மறுத்து வந்தார்.

இதற்கிடையில் 12 அதிகாரிகள் கொண்ட அமலாக்கத்துறை குழுவினர், நேற்று கெஜ்ரிவாலின் வீட்டிற்கு சென்று சோதனை நடத்தினர். இதையடுத்து அமலாக்கத்துறை அதிகாரிகள் கெஜ்ரிவாலை நேற்றிரவு அதிரடியாக கைது செய்தனர். தொடர்ந்து கெஜ்ரிவால், நேற்று (மார்ச் 22) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் சிபிஐஎம் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் மற்றும் அபிஷேக் மனு சிங்வி, திமுக சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., டிஎம்சி சார்பில் டெரிக் ஓ பிரையன், முகமது நதிமுல் ஹக், ஆம் ஆத்மி சார்பில் சந்தீப் பதக் மற்றும் பங்கஜ் குப்தா, சமாஜ்வாதி கட்சி சார்பில் ஜாவேத் அலி, தேசியவாத காங்கிரஸ் சார்பில் ஜிதேந்திர அவாத் உள்ளிட்டோர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதற்கு எதிராகவும், இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கக்கூடிய தலைவர்களை அமலாக்கத்துறையும், சிபிஐயும் தொடர்ந்து மிரட்டப்படுவதாகவும் புகார் அளித்தனர்.

---

### இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து

# திருவொற்றியூர் தொகுதியின் செயல்வீரர்கள் கூட்டம்!

**தலைமை: மாதவரம் எஸ்.சுதர்சனம்! கே.பி.சங்கர் - தி.மு.தனியரசு - அருள்தாசன் - ஏ.வி.ஆறுமுகம் பங்கேற்பு!**

சென்னை, மார்ச் 23

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் & வடசென்னை தொகுதி நாடாளுமன்ற வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி அறிமுக கூட்டம் இன்று (23.3.2024) காலை 10 மணிக்கு வடக்கு மாடவீதி தெரு, டி.கே.பி.திருமண மாளிகையில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெற உள்ளது.

வரவேற்புரை: பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு.

மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன், மத்திய பகுதி செயலாளர் 2வது மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர். ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள்,

வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணியின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக தோழர்கள் திரளாக கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றியுரை: 10வது வட்ட செயலாளர் எஸ்.தமிழ்செல்வன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



உச்சநீதிமன்ற உத்தரவினை அடுத்து முனைவர் க.பொன்முடிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக நிர்வாகிகள் இனிப்பு வழங்கினார்.

---

### சென்னை பெருநகர

# ஆட்டோ ஓட்டுனர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் கூட்டம்!

**ஜி.பழனி அறிக்கை!!**

சென்னை, மார்ச் 23

சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுனர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் ஜி.பழனி அறிக்கை வருமாறு:-

இன்று (23.3.2024, சனிக்கிழமை) காலை 10 மணியளவில் தியாகராயாசாலை தொ.மு.ச. பேரவை அலுவலகம் “கலைஞரகத்தில்” சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுனர் முன்னேற்ற சங்கததின் சார்பாக பாராளுமன்ற தேர்தலில் பணியாற்றுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் சங்கத் தலைவர் ஐ.சி.எப். துரை தலைமையில் தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி.,பொருளாளர் கி.நடராசன், சங்க பொருளாளர் ப.பன்னீர்செல்வம் ஆகியோர்கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

கூட்டத்தில் தலைமை சங்க நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்கின்றனர்!

# மாங்காட்டில் ‘இந்தியா’ கூட்டணி தேர்தல் பணிமனை!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மார்ச் 23-

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி - மாங்காடு நகர இந்தியா கூட்டணி தேர்தல் பணிமனை திறப்பு விழா நாளை (24.03.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 9.00 மணியளவில் மாங்காடு மெயின் ரோடு, சைபர்சிட்டி அருகில் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன், திருப்பெரும்புதூர் நாடாளு மன்றத் தொகுதி கழக வேட்பாளர்டி.ஆர். பாலு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் / திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர்கு.செல்வப்பெருந்தகை, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

எனவே நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பா ளர்கள் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாண வரணி தோழர்கள், மகளிரணி சகோதரிகள், கழகத்தோழர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 33 லட்சம் மதிப்பில் எண்ணூர் நெட்டுக்குப்பம் மீனவ கிராமத்திற்கு கிராம நிர்வாகிகள் முன்னிலையில், மண்டல நல அலுவலர் நவேந்திரன் தலைமையில் கலையரங்கம் அமைக்கும் பணியினை 13.03.2024 அன்று மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங்கு, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.செல்வம், டி.மகேந்திரன் ஆர்.குமரன், பகுதி துணை செயலாளர் இ.குமரவேல் ஆர்.இளங்கோ, எஸ்.தினகர், குணசேகரன், சுரேந்திரன், கண்ணன், சந்துரு, மதி, சின்னராஜ், தேவேந்திரன், விஜி, ராஜேஷ், ஆர்.பாலா, சிலோர், மணி, பிரகாஷ், சரவணன், பாலு, வெற்றி, தயா, தீனா, பிரேம், மதன், அருள், கேசவன், தேசப்பன், ராஜப்பன் மகளிர்கள் ராணி, குப்பு லட்சுமி, பவானி, ரேணுகா, மற்றும் கிராம நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



## 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

### 23.03.2024, சனிக்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | மாலை 5.00 மணி | பேருந்து நிலையம் அருகில், காரியாப்பட்டி, விருதுநகர் வடக்கு மாவட்டம். | இராமநாதபுரம் |
| 2 | மாலை 6.00 மணி | சிவன்கோவில் அருகில், அருப்புக்கோட்டை, விருதுநகர் தெற்கு மாவட்டம். | விருதுநகர் |
| 3 | இரவு 7.15 மணி | ஆனந்தா திரையரங்கம் அருகில், திருமங்கலம், மதுரை தெற்கு மாவட்டம். | விருதுநகர் |
| 4 | இரவு 8.30 மணி | தேவர் சிலை அருகில், உசிலம்பட்டி, மதுரை தெற்கு மாவட்டம். | தேனி |
| 5 | இரவு 9.15 மணி | முருகன் திரையரங்கம் முன்பு, ஆண்டிபட்டி, தேனி தெற்கு மாவட்டம். | தேனி |

### 24-03-2024, ஞாயிற்றுக்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பங்களாமேடு, தேனி, தேனி வடக்கு மாவட்டம். | தேனி |
| 2 | காலை 11.00 மணி | புதிய பேருந்து நிலையம் பிரிவு, பெரியகுளம், தேனி வடக்கு மாவட்டம். | தேனி |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 5.00 மணி | மணிக்கூண்டு, திண்டுக்கல், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம். | திண்டுக்கல் |
| 4 | மாலை 6.15 மணி | பேருந்து நிலையம் அருகில், நத்தம், திண்டுக்கல் மேற்கு மாவட்டம். | திண்டுக்கல் |
| 5 | இரவு 7.00 மணி | ஊமச்சிக்குளம், மதுரை, மதுரை வடக்கு மாவட்டம். | மதுரை |
| 6 | இரவு 7.45 மணி | புதூர், மதுரை, மதுரை மாநகர் மாவட்டம். | மதுரை |

### 25-03-2024, திங்கள்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | மாலை 5.00 மணி | பெரியார் தூண், காந்தி சாலை, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | காஞ்சிபுரம் |
| 2 | மாலை 6.00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மார்க்கெட் அருகில், செய்யாறு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 3 | இரவு 7.00 மணி | காமராஜர் சிலை, பழைய பேருந்து நிலையம் அருகில், வந்தவாசி, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 4 | இரவு 8.00 மணி | காமராஜர் சிலை அருகில், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 5 | இரவு 9.00 மணி | பேருந்து நிலையம் அருகில், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |

### 26-03-2024, செவ்வாய்க்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | காந்தி சிலை சந்திப்பு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 2 | காலை 10.45 மணி | பேருந்து நிலையம் அருகில், கூட்ரோடு, இறையூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 3 | காலை 11.45 மணி | அம்பேத்கர் சிலை அருகில், செங்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 4 | மதியம் 12.30 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 5 | மாலை 5.00 மணி | ரயில்வே சந்திப்பு அருகில், கோடியூர், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| 6 | மாலை 5.45 மணி | பேருந்து நிலையம் அருகில், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 7 | இரவு 6.30 மணி | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் சாலை, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 8 | இரவு 7.30 மணி | பேருந்து நிலையம் அருகில், போ்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 9 | இரவு 8.15 மணி | பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 10 | இரவு 9.00 மணி | பிரதான சாலை, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 11 | இரவு 9.30 மணி | மண்டித் தெரு, வேலூர், வேலூர் மாவட்டம். | வேலூர் |

### 27-03-2024, புதன்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.

---

காஞ்சி வடக்கு மாவட்ட ‘இந்தியா’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

# திருப்பெரும்புதூர் - காஞ்சிபுரம் தொகுதி வேட்பாளர்கள் அறிமுக கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம், மார்ச் 23-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நடைபெறுகிறது என மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார். மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன்அறிவிப்பு வருமாறு :

நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் தொடர்பாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் க.செல்வம் ஆகிய 2 வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம், வருகிற 26.3.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் வண்டலூர், வாலாஜாபாத் நெடுஞ்சாலையில் படப்பை கரசங்காலில் அமைந்துள்ள கலைஞர் திடலில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், தி.மு.க கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் உள்ளடக்கிய தி.மு.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் , இந்திய கம்யூனிஸ்ட் , ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, திராவிடர் கழகம், மக்கள்நீதி மய்யம், ஆம் ஆத்மி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை மனிதநேய ஜனநாயக கட்சி இந்திய தேசிய லீக் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் பகுதி ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த செயல்வீரர் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: வருகிற 19.04.2024 அன்றுநடைபெற உள்ளநாடாளுமன்ற தேர்தல் பணிகளை இந்தியாகூட்டணிகட்சிஇனைந்து மேற்கொள்வது குறித்து.

இவ்வாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவித்துள்ளார்.

---

## அரசியல் சாசனத்தின் உணர்வை நிலைநாட்டி -

# ஜனநாயகத்தை காப்பாற்றிய உச்சநீதிமன்றத்திற்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



**சென்னை, மார்ச் 23-**

**அரசியல் சாசனத்தின் உணர்வை நிலைநாட்டி ஜனநாயகத்தைக் காப்பாற்றிய உச்சநீதிமன்றத்திற்கு தமிழ்நாட்டுமக்களின்சார்பாகஎனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்துமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

அரசியல் சட்டத்தின் காவலரணான மாண்பமை உச்சநீதிமன்றம்,சரியானநேரத்தில்தலையிட்டு,அரசியல் சாசனத்தின் உணர்வை நிலைநாட்டி, ஜனநாயகத்தைக் காப்பாற்றியதற்காக,தமிழ்நாட்டுமக்களின்சார்பாகஎனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த பத்தாண்டுகளில், ஜனநாயகச் சிதைவையும், கூட்டாட்சியின் மறைவையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறையாண்மை கொண்ட அரசாங்கங்களின் செயல்பாட்டிற்கு முன் கூர்முனைகளை இடும் தவறான சாகசங்களையும், பல ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபுகள் கைவிடப்பட்டதையும் இந்திய மக்கள் கண்டு வருகின்றனர்.

2024 மக்களவைத் தேர்தல், மக்களாட்சியைக் காப்பாற்றவும், அரசியலமைப்பை நிலைநிறுத்தவும் மிக முக்கியமானது.

நமது புகழ்மிகு நாட்டை நாசமாக்க அச்சுறுத்தும் பாசிச சக்திகளின் அப்பட்டமான அதிகார அத்துமீறலைத் தடுக்கக் கடுமையாகப் பாடுபடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அவர்கள் அறிக்கை:

*2024 ஈரோடு நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி தி.மு.கழக தேர்தல் பணிக்குழு*

| | | |
|---|---|---|
| **மாண்புமிகு. மரு. மா. மதிவேந்தன்,**<br>வனத்துறை அமைச்சர் | **திரு. எஸ்.எம். மதுரா செந்தில்,**<br>நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் | *097-குமாரபாளையம் தொகுதி பொறுப்பாளர்*<br>**திரு. திருப்பூர். E. தங்கராஜ்,**<br>மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,<br>திருப்பூர் வடக்கு மாவட்டம் |

**97-குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்ட நிர்வாகிகள்** | | R.நடனசபாபதி | அவைத்தலைவர் |
| | | M.ராஜராம் | பொருளாளர் |
| | | O.R.செல்வராஜ் | தலைமைசெயற்குழுஉறுப்பினர் |
| | | M.வெங்கடாசலம் | தலைமைசெயற்குழு உறுப்பினர் |
| | | R.வேலுமணி | பொதுக்குழு உறுப்பினர் |
| | | A.ரவிச்சந்திரன் | பொதுக்குழு உறுப்பினர் |
| **திரு.என்.நாச்சிமுத்து** பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் | பல்லக்கா பாளையம் | மாதேஸ்வரன் | கிளை செயலாளர் |
| | | சக்திவேல் | கிளை பிரதிநிதி |
| | | காமராஜ் | கிளை செயலாளர் |
| | | ராஜேந்திரன் | கிளை செயலாளர் |
| | | சிவகுமார் | கிளை துணை செயலாளர் |
| | தட்டாங் குட்டை | S.கார்த்திக் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | S.ராஜ் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | A.ஜான்பீட்டர் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | நவீன் செந்தில்குமார் | கிளை செயலாளர் |
| | | சேகர் | கிளை செயலாளர் |
| | களியனூர் அக்ரஹாரம் | S.விஜயகுமார் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | K.கருப்புசாமி | கிளை செயலாளர் |
| | | K.லட்சுமணன் | கிளை செயலாளர் |
| | | P.ராமசாமி | கிளை செயலாளர் |
| | | C.மதியழகன் | கிளை செயலாளர் |
| | சௌதாபுரம் | R.ஜெயந்தி | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | உதயகுமார் | கிளை செயலாளர் |
| | | செந்தில்குமார் | கிளை செயலாளர் |
| | | மாணிக்கம் | கிளை பிரதிநிதி |
| | | செல்லையன் | கிளை செயலாளர் |
| | | குழந்தைவேல் | கிளை பிரதிநிதி |
| | குப்பாண்ட பாளையம் | M.R.ராஜேந்திரன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | K.L.முருகன் | கிளை செயலாளர் |
| | | K.சுந்தரராஜ் | கிளை செயலாளர் |
| | | S.ஜெகதீஸ்வரன் | கிளை செயலாளர் |
| | | M.சசிகுமார் | கிளை செயலாளர் |
| | | P.லோகநாதன் | கிளை செயலாளர் |
| **திரு.ஆர்.செல்வம்** பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் | எலந்தகுட்டை | ஏ.நடேசன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | R.கலையரசன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | கிருஷ்ணமூர்த்தி | முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் |
| | | மோகன் | ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் |
| | | ரகுபதி | மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் |
| | | ஈஸ்வரன் | கிளை செயலாளர் |
| | | பிரதீப் | ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் |
| | பாதரை | ராஜ்குமார் | கிளை செயலாளர் |
| | | R.கௌசல்யா | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | முருகேஷ் | கிளை பிரதிநிதி |
| | | தியாகு வெங்கடேஷ் | கிளை செயலாளர் |
| | | ரத்தினகுமார் | கிளை பொரளாளர் |
| | | செங்கோட்டையன் | கிளை செயலாளர் |
| | களியனூர் | பழனிச்சாமி | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | ரவி | கிளை செயலாளர் |
| | | வெங்கடேஷ் | ஊராட்சி மன்ற துணைத் தலைவர் |
| | | குமரவேல் | மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் |
| | | ராமலிங்கம் | கிளை செயலாளர் |
| | சமயசங்கிலி | S.மாதேஸ்வரன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | சேகர் | ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் |
| | | கோவிந்தராஜ் | கிளை செயலாளர் |
| | | வடிவேல் | கிளை செயலாளர் |
| | | மெய்யழகன் | ஒன்றிய மீனவர் அணி அமைப்பாளர் |
| | | பி.சண்முகம் | கிளை செயலாளர் |
| | பள்ளிபாளையம் அக்ரஹாரம் | R.செந்தில்குமார் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | சிவசுப்பிரமணி | மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் |
| | | ஜெய கோபி | மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் |
| | | D.சுகுமார் | மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் |
| | | R.குப்புசாமி | மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் |
| **திரு.ஆ.இளங்கோவன்** பள்ளிபாளையம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் | காடச்சநல்லூர் | M.சம்பத்குமார் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | R.சந்திசேகரன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | தங்கராஜ் | மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் |
| | | செல்வராஜ் | மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் |
| | | கார்த்திக் | கிளை செயலாளர் |
| | புதுப்பாளையம் அக்ரஹாரம் | ஆறுமுகம் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | PKD.ஆனந்த் | கிளை செயலாளர் |
| | | அன்புகுமார் | கிளை பொருளாளர் |
| | | T.ரமேஷ் | மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் |
| | | முருகேசன் | மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் |
| | ஓடப்பள்ளி | G.கணேசன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | P.K.அன்பழகன் | மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் |
| | | B.குமார் | மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் |
| | | ரமேஷ் | மாவட்ட பிரதிநிதி |
| | | S.ராதாகிருஷ்ணன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | பாப்பம் பாளையம் | ஜான்சன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | | வீரமணி | முன்னாள் ஊராட்சி செயலாளர் |
| | | சின்னுசாமி | கிளை செயலாளர் |
| | | பிரவீன்சன் | கிளை துணை செயலாளர் |
| | | பெரியசாமி | கிளை செயலாளர் |
| | கொக்கராயன் பேட்டை | ராகேஷ்கண்ணன் | மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் |
| | | தமிழரசு | கிளை செயலாளர் |
| | | ஹரிகிருஷ்ணன் | கிளை செயலாளர் |
| | | துரைசாமி | கிளை செயலாளர் |
| | | அசேன் | கிளை பிரதிநிதி |

| | | |
|---|---|---|
| **திரு.அ.குமார்,** பள்ளிபாளையம் நகர கழக செயலாளர் | H.குலோப்ஜான் | நகர அவைத்தலைவர் |
| | மோ.செல்வராஜ் | நகர்மன்ற தலைவர் |
| | P.பாலமுருகன் | நகர்மன்ற துணை தலைவர் |
| | K.ரவி | மாவட்ட பிரதிநிதி |
| | P.சண்முகம் | நகர துணை செயலாளர் |
| | R.சிவக்குமார் | நகர துணை செயலாளர் |
| | S.மேகலா | நகர துணை செயலாளர் |
| | A.ராஜா | நகர பொருளாளர் |
| | M.செல்வராஜ் | மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் |
| | C.குணசேகரன் | மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் |
| | செல்வம் | மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் |
| | சசிக்குமார் | மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் |
| | மீன்.G.செல்வன் | மாவட்ட மீனவர் அணி தலைவர் |
| | K.மனோகரன் | மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் |
| | L.முருகன் | மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் |
| **திரு.டி.விஜயகண்ணன்,** குமாரபாளையம் வடக்கு நகர கழக பொறுப்பாளர் | மு.சத்தியசீலன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | N.கந்தசாமி | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | S.ராஜ்குமார் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | கே.பன்னீர்செல்வம் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | ஐ.ஜேம்ஸ் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | A.பெருமாள் | மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் |
| | S.செந்தில்குமார் | மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் |
| | M.H.ஜுல்பிகார் அலி | மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் |
| | P.பரணிதரன் | மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் |
| | M.சரவணன் | முன்னாள் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| | G.ஜீவா | நகர இளைஞர் அணி |
| | C.விக்னேஷ் | நகர இளைஞர் அணி |
| | G.இனியா ராஜ் | வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| | A.வேல்முருகன் | வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| | லோகவிஜயன் | மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் |
| | C.விவேக் | நகர தகவல் தொழில்நுட்ப அணி |
| | K.M.சூர்யா | நகர தகவல் தொழில்நுட்ப அணி |
| **திரு.எஸ்.ஞானசேகரன்,** குமாரபாளையம் தெற்கு நகர கழக பொறுப்பாளர் | K.A.ரவி | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | M.செந்தில்குமார் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | S.செல்வகுமார் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | R.S.தர்மராஜன் | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | M.தேவிமணி | பொறுப்புக்குழு உறுப்பினர் |
| | கோவிந்தசாமிநாதன் | துணை அமைப்பாளர், வர்த்தகர் அணி |
| | S.கதிரவன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி |
| | சுப்பரமணி | முன்னாள் வார்டு செயலாளர் |
| | கருப்புசாமி | வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் |
| | பாஸ்கர் | வார்டு இளைஞர் அணி |
| | சுரேஷ் | வார்டு துணை செயலாளர் |
| | C.பாலசுப்ரமணியம் | வார்டு அவை தலைவர் |
| | செல்வ முருகன் | வார்டு பிரதிநிதி |
| | M.குமார் | வார்டு பிரதிநிதி |
| | திராவிட மணி | வார்டு அவை தலைவர் |
| | குணசேகரன் | வார்டு பிரதிநிதி |
| | K.வேலுச்சாமி | வார்டு பிரதிநிதி |
| | அன்புராஜ் | இலக்கிய அணி |
| | தினகரன் | வார்டு பிரதிநிதி |
| | முருகேசன் | வார்டு பிரதிநிதி |
| | அருண் | வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் |
| | பெருமாள் | வார்டு பிரதிநிதி |
| | கார்த்தி | வார்டு இளைஞர் அணி |
| **திரு.S.B.கார்த்திராஜ்,** ஆலாம்பாளையம் பேரூர் கழக செயலாளர் | P.சகுந்தலா | பேரூராட்சி தலைவர் |
| | சண்முகப்பிரியா | பேரூராட்சி துணை தலைவர் |
| | M.செல்வராஜ் | மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் |
| | K.அன்பு | மாவட்டசிறுபான்மையினர் அணி துணை தலைவர் |
| | R.பிரேம்குமார் | மாவட்ட தொழிலாளர் அணி துணை செயலாளர் |
| | R.சின்னசாமி | மாவட்ட பிரதிநிதி |
| | K.V.பாபு | பேரூர் துணை செயலாளர் |
| | M.கணேசன் | பேரூர் பொருளாளர் |
| | P.ருக்மணி | பேரூர் துணை செயலாளர் |
| **திரு.எஸ்.ராமமூர்த்தி,** படைவீடு பேரூர் கழக செயலாளர் | S.ராதமணி | பேரூராட்சி தலைவர் |
| | M.பூபதிராஜு | தகவல் தொழிழ்நுட்ப அணி |
| | தனபால் | பேரூராட்சி உறுப்பினர் |
| | நல்லசிவம் | வார்டு செயலாளர் |
| | செல்வன் | வார்டு பிரதிநிதி |
| | A.கார்த்திக் | ஒன்றிய பிரதிநிதி |
| | ராஜ்குமார் | வார்டு பிரதிநிதி |
| | சரவணன் | ஒன்றிய பிரதிநிதி |

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க



சென்னை – ஆளுநர் மாளிகையில், நேற்று மாலை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், முனைவர் க.பொன்முடி அவர்கள் அமைச்சராகப் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டார். ஆளுநர் ஆர்.என்.ரவி, பதவியேற்பு உறுதிமொழி செய்து வைத்தார்.

முனைவர் க.பொன்முடிக்கு அமைச்சராகப் பதவிப்பிரமாணம் குறித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆளுநர் கடிதம்!

சென்னை, மார்ச் 23

உச்சநீதிமன்றத்தின் கண்டனத்தை அடுத்து தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, முனைவர் க.பொன்முடிக்கு ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறும் என்றும், க.பொன்முடிக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் பொறுப்பு வழங்கிட ஒப்புதல் அளித்திருப்பதாகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (22.3.2024) ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், முதலமைச்சர் அவர்கள், 13.3.2024 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, முனைவர் க. பொன்முடி அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறை அமைச்சர் பொறுப்பு வழங்கிட ஒப்புதல் அளிப்பதாகவும், 22.3.2024 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு முனைவர் க. பொன்முடி அவர்களுக்கு கிண்டி ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறும் எனவும் ஆளுநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அமைச்சர் ராஜ கண்ணப்பனுக்கு கூடுதல் பொறுப்பு!**

மேலும், முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, தற்போது அமைச்சர் காந்தி அவர்களின் பொறுப்பில் உள்ள கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தினை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதாகவும், அக்கடிதத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றக் கண்டனத்திற்கு ஆளாகிய

# தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவி நீக்கம் செய்திட வேண்டும்!

## தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, மார்ச் 23-

சனாதனம் பேசி சண்டித்தனம் செய்யும் ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழிசை சௌவுந்தராஜனை போன்று பதவியை ராஜினாமா செய்து தேர்தலில் நிற்கட்டும் என்றும் உச்ச நீதிமன்றக் கண்டனத்திற்கு தொடர்ந்து ஆளாகி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவி நீக்கம் செய்திட வேண்டும் என்றும் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறுவதிலும் உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்தை பெறுவதிலும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு நிகர் அவரே! தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாக்கியுள்ள ஆளுநர் ரவி ராஜினாமா செய்ய வேண்டும் அல்லது மோடி அரசு அவரை உடனடியாக திரும்பப் பெற்றிட வேண்டும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

தற்போதும் பொன்முடி அவர்களை மீண்டும் அமைச்சரவையில் இணைக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முடிவெடுத்து அதற்கான பரிந்துரையை ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

வழக்கம்போல் அதனை ஏற்க மறுத்து ஆளுநர் சண்டித்தனம் செய்து வந்தார். இந்த நிலையில் உச்ச நீதிமன்றத்திற்கு இது குறித்து வந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் ஆளுநரைக் கடுமையாகக் கண்டித்து, அவருக்கு ஒரு நாள் அவகாசம் அளித்தது. அதனடிப்படையிலேயே ஆளுநர் பணிந்து இன்று பொன்முடி அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து தொடர்ந்து அரசோடு சண்டித்தனம் செய்வதையே வாடிக்கையாகக் கொண்டு வருகிறார். அரசியல்வாதிகளைப் போன்று சனாதான கருத்துகளை பரப்புவது, சமஸ்கிருத மொழி திணிப்பில் ஈடுபடுவது போன்ற அரசியல் சாசனத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். தமிழ்நாட்டு மக்களுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு சட்டப்பேரவை இயற்றி அனுப்பும் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இழுத்தடிக்கிற நடவடிக்கைகளை ஆளுநர் வழக்கமாகக் கொண்டு வருகிறார். இதில் பல நேரங்களில் உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு பிறகு பணிந்துள்ளார்.

**உச்ச நீதிமன்றம் கண்டனம்!**

இந்த நிலையில் அமைச்சராக இருந்த பொன்முடி அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. உச்ச நீதிமன்றம் ஒரு தண்டனை நிறுத்தி வைத்தால் அவர் பழைய நிலையை அடைகிறார். அதாவது அவர் அமைச்சர் என்கிற அந்தஸ்தை பெறுகிறார். அந்த அடிப்படையில் தான் அவர் திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினராக மீண்டும் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார். இந்த நிலையில் அவரை மீண்டும் அமைச்சரவையில் சேர்க்க முதல்வரின் பரிந்துரையை ஏற்க ஆளுநர் மறுத்தார். வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு சென்றது. உச்சநீதிமன்றம் வழக்கம் போல் தமிழ்நாடு ஆளுநர் ரவி அவர்களுக்கு கடும் கண்டனங்களை தெரிவித்து இந்த பிரச்சினையில் முடிவெடுக்க ஒரு நாள் அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த விவகாரத்தை பொருத்தவரை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி என்ன செய்கிறார்? என்பது அவருக்கு தெரிகிறதா? அல்லது இல்லையா? அவருக்கு சட்டம் தெரியுமா? தெரியாதா? ஒரு மாநிலத்தின் முதல்வர் கொடுக்கும் பரிந்துரையை ஆளுநர் எப்படி நிராகரிக்க முடியும்? அதற்கான அதிகாரம் அவருக்கு கிடையாது. குறிப்பாக யாரை அமைச்சரவையில் சேர்ப்பது என்பது முதல்வரின் அதிகாரத்திற்குட்பட்டது. அதில் ஆளுநர் எப்படி தலையிட முடியும்? அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக ஆளுநர் செயல்படலாமா? இந்த விவகாரத்தில் ஆளுநருக்கு ஒன்றிய அரசு தரப்பில் இருந்து ஆலோசனை கூற வேண்டும். இல்லை என்றால் கடுமையான கருத்துக்களை உச்சநீதிமன்றம் பதிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்று உச்ச நீதிமன்றம் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் முடிவெடுக்க ஆளுநருக்கு ஒரு நாள் அவகாசம் வழங்கிய உச்ச நீதிமன்றம், அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு ஆளுநர் நடக்க வேண்டும் என்று நேரடியாக உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வைக்க வேண்டிய நிலை வரும் என்று உச்ச நீதிமன்றம் ஆளுநருக்கு கடும் கண்டனத்தை தெரிவித்தது. அதன் பின் தான் ஆளுநர் பணிந்துள்ளார்.

**சனாதன கொள்கையை பரப்பும் ஆளுநர்!**

இப்படி உச்ச நீதிமன்றத்தின் கடும் கண்டனத்திற்கு ஆளாகியுள்ள, தொடர்ந்து ஆளாகி வரும் தமிழ்நாடு ஆளுநர் சுய மரியாதை என்று ஒன்று இருக்குமேயானால் தமிழிசை சௌந்தர்ராஜன் போன்று அவர் உடனடியாக தன் பதவியை ராஜினாமா செய்து விட்டு ஏதாவது ஒரு தொகுதியில் நின்று நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, பிஜேபியின் சனாதானக் கொள்கையை பரப்பட்டும். அதில் யாருக்கும் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. ஒரு வேளை அவருக்கு சுயமரியாதை என்று ஒன்று இல்லை என்றால், ஒன்றிய மோடி அரசும், ஜனாதிபதி அவர்களும் உடனடியாக தமிழ்நாடு ஆளுநரை திரும்பப் பெற்று அரசியல் சட்டத்தின் மாண்பை காத்திட வேண்டுமென விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு பொன்.குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



# தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தி.மு.க. தலைமையிலான ‘INDIA’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மயிலை த.வேலு அறிவிப்பு!





தி.மு.க. தலைமையிலான ‘INDIA’ கூட்டணி தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களை மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் மாபெரும் செயல்வீரர்கள் கூட்டம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் இன்று (23-03-2024 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற உள்ளது.

எனவே மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதி, ஒன்றிய செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, பகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், பாக தலைவர் - பாக முகவர்கள், கழக முன்னோடிகள் மற்றும் மாவட்ட முழுவதும் உள்ள கழக செயல் வீரர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**தென்சென்னை நாடாளுமன்றத் தேர்தல் பணிக்குழு**





ஆளுநர் மாளிகையில், ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் உயர்கல்வித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட முனைவர் க. பொன்முடிக்கு மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியுள்ள திட்டங்களால்

# தி.மு.க. கூட்டணிக்கு தேர்தலில் மகத்தான வெற்றி கிடைக்கும்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, மார்ச் 23 -

திராவிட மாடல் ஆட்சியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் மக்கள் நலத்திட்டங்களால் திமுக கூட்டணி நாடாளுமன்றத்தேர்தலில்மகத்தான வெற்றி பெறும் என்று, கூட்டணி இயக்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.



21.03.2023 வியாழக்கிழமை அன்று மாலை 6.00மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் சாலை, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திருவண்ணாமலை மற்றும் ஆரணி மக்களவை தொகுதி, இந்தியா கூட்டணிக்கட்சிநிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவண்ணா மலை தொகுதி, கழக சி.என்.அண்ணாதுரை மற்றும் ஆரணி தொகுதி கழக வேட்பாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் ஆகியோரை அறிமுகப்படுத்தி கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும்,பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது...

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை மற்றும் ஆரணி தொகுதிகளில் இந்தியா கூட்டணி சார்பில் திமுக வேட்பாளர்கள் சி. என்.அண்ணாதுரை, எம். எஸ்.தரணிவேந்தன் ஆகியோரை திமுக வேட்பாளர்களாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். இந்தியா கூட்டணியில்போட்டியிடும்திமுக வேட்பாளர்களின் வெற்றிக்குவியூகம்வகுத்து தோழமைக் கட்சியனர் அனைவரும் இந்த தேர்தலில் பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றி யுள்ள எண்ணற்ற மக்கள் நல திட்டங்களின் பயன்கள் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் சென்று சேர்ந்து இருக்கிறது. சூகாடிக் கணக்கான மக்கள் நேரடியாக பயனடைந்துள்ளனர். ஏனவே முதல்வர் நிறைவேற்றியுள்ள திட்டங்களால் திமுக கூட்டணி வேட்பாளர்கள் மகத்தான வெற்றியை வெறுவார்கள். அதற்காக நாம் அனைவரும் இந்த தேர்தலில் அயராது பாடுபட வேண்டும். இவ்வாறு பேசினார்.

முன்னதாகதிருவண்ணாமலைதொகுதிவேட்பாளர் சி.என்.அண்ணாதுரை பேசும்போது...

கடந்த 5 ஆண்டுகளாக எதிர்கட்சி வரிசையில் எம்.பியாக பணியாற்றினேன். நாடாளுமன்றத்தில் 507 கேள்விகளைஎழுப்பி,தமிழ்நாட்டிலேயேமுதலிடத்தை பெற்றுள்ளேன். இந்த தொகுதியின்வளர்ச்சிக்காகவும்பேசிஇருக்கிறேன்.ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டிற்காக எதையும் செய்யவில்லை. ஆனாலும் மாற்றுத்திறனாளிகக்கான நலத்திட்டங்கள் போன்றவற்றைஒன்றியஅரசுஅதிகாரிகளின் துணையோடு என்னால் செய்ய முடிந்த அளவுக்குசெய்திருக்கிறேன்.

ஒரு ஆளுங்கட்சி எம்.பியால் செய்ய இயலாத பணிகளையும் எதிர்கட்சி எம்பியாக இருந்து செய்திருக்கிறேன். இந்த தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும்.இந்தமுறைஎன்னை வெற்றிபெற வைத்தால் சிறப்பான எம்.பியாக பணியாற்றுவேன். இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ. வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர்பிரியாப.விஜயரங்கன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மக்கள் நீதிமய்யம், தலித் விடுதலை இயக்கம், யாதவ மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கே.பி.சொக்கலிங்கம் எம்.சி. - பி.தமிழரசன் எம்.சி. - மு.மாணிக்கவேலன் முன்னிலை! திருவொற்றியூர் மேற்கு பகுதி

# 3, 3(அ ), 5 ஆகிய வட்டங்களின் பாக முகவர்கள் கூட்டம்!

## கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., சி.தசரதன், வை.ம.அருள்தாசன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 23

திராவிட நாயகர் கழகத் தலைவர் ஆணைக்கிணங்க 2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்த பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுரையின் பேரில் திருவொற்றியூர் மேற்கு பகுதி 3, 3(அ ) 5 ஆகிய வட்டங்களில் 21.3.24 அன்று நடைபெற்றது.

பாகமுகவர்கள் பாக பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் கூட்டம் பகுதி கழக அறிவுறுத்தலின்படி வட்ட கழக செயலாளர்கள் கே.பி. சொக்கலிங்கம் எம்.சி,

பி.தமிழரசன் எம்.சி, மு.மாணிக்கவேலன் ஆகியோர் முன்னிலையில் அந்தந்த வட்டங்களில் நடைபெற்றது.

இக்கூட்டங்களில் மாநில மீனவர் அணி துணை தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி. சங்கர் எம் எல் ஏ,

மாநில ஆதிதிராவிட துணைச் செயலாளர் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மயிலை சி.தசரதன், திருவொற்றியூர் மேற்கு பகுதிகழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோர்பங்கேற்றுஆலோசனை வழங்கினார்கள்.

5 வது வட்டத்தில் ஐ.டி.சி. மெட்ரோ அருகில் டி.ஆர் பாரடைஸ்ல் மாலை 6.00 மணியளவில் வட்டக் கழக செயலாளர் கே.பி. சொக்கலிங்கம் எம்.சி. முன்னிலையில் பாக பொறுப்பாளர்கள் அயலக அணி மாவட்ட தலைவர் எஸ். டி.சங்கர், ஏ.அலெக்ஸ் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள்,( BLA & 2 ) பாக முகவர்கள் பங்கேற்றனர்.

3 வது வட்டத்தில் அன்னை சிவகாமி நகர் 1வது தெருவில் உள்ள வட்ட கழக செயலாளர் அலுவலகத்தில் மாலை 6:30 மணியளவில் வட்ட கழக செயலாளர் மு. மாணிக்கவேலன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பாகப் பொறுப்பாளர்கள் வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் வீ. தியாகராஜன், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் (BLA &2) பாக முகவர்கள் பங்கேற்றனர்.

3 (அ )வது வட்டத்தில் அன்னை சிவகாமி நகர் 5 வது தெருவில் உள்ள வட்ட கழக செயலாளர் அலுவலகத்தில் மாலை 7:00 மணியளவில் வட்ட கழக B. தமிழரசன்MC முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பாக பொறுப்பாளர்கள் பகுதி கழக துணை செயலாளர் யு.எஸ்.குறளரசன், மீனவர் அணி மாவட்ட தலைவர் ஆர்.நவகுமார் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் (BLA &2) பாக முகவர்கள் பங்கேற்றனர்.


இக்கூட்டத்தில் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் மீண்டும் இரண்டாம் முறையாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் மருத்துவர் கலாநிதி வீராசாமி அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற ஆற்ற பணிகள் குறித்தும், பாக முகவர்களின் பணிகள் குறித்தும் , தலைமை கழக அறிவுறுத்தலின்படி தொகுதி பொறுப்பாளர் தசரசதன் அவர்களும் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் அவர்களும் வட்டக் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் பாகப் பொறுப்பாளர்கள் மற்றும் பாக முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.



திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் “இந்தியா” கூட்டணியில் போட்டியிடும்

# கழகவேட்பாளர் டி.ஆர்.பாலு 25-ஆம் தேதி செங்கல்பட்டில் வேட்புமனு தாக்கல்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் “இந்தியா” கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றிவேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள் வருகிற 25.03.2024 திங்கள்கிழமை காலை 9.30 மணியளவில் வேட்புமனு தாக்கல் செய்ய, செங்கல்பட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்குமாலை அணிவித்துவிட்டு, சக்திவிநாயகர் கோயில் அருகில் இருந்து, ஊர்வலமாக புறப்பட்டுச் சென்று செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல்செய்கிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய ஆலந்தூர் - திருப்பெரும்புதூர் - பல்லாவரம் – தாம்பரம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய “இந்தியா” கூட்டணி கட்சிகளில் இடம் பெற்றுள்ள தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் அனைவரும் இந்த வேட்பு மனு தாக்கல் நிகழ்ச்சியில் திரண்டு வந்து பங்கேற்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## நாடாளுமன்றத் தேர்தல் – 2024 : தமிழ்நாடு முழுவதும்



# கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர்,

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயண விவரம் வருமாறு :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| **23.03.2024 (சனிக்கிழமை)** | **தஞ்சை, நாகை** |
| **25.03.2024 (திங்கட்கிழமை)** | **கன்னியாகுமரி, திருநெல்வேலி** |
| **26.03.2024 (செவ்வாய்க்கிழமை)** | **தூத்துக்குடி இராமநாதபுரம்** |
| **27.03.2024 (புதன் கிழமை)** | **தென்காசி விருதுநகர்** |
| **29.03.2024 (வெள்ளிக்கிழமை)** | **தருமபுரி, கிருஷ்ணகிரி** |
| **30.03.2024 (சனிக்கிழமை)** | **சேலம், கள்ளக்குறிச்சி** |
| **31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **ஈரோடு நாமக்கல் கரூர்** |
| **02.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **வேலூர், அரக்கோணம்** |
| **03.04.2024 (புதன்கிழமை)** | **திருவண்ணாமலை ஆரணி** |
| **05.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **கடலூர், விழுப்புரம்** |
| **06.04.2024 (சனிக்கிழமை)** | **சிதம்பரம், மயிலாடுதுறை** |
| **07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **புதுச்சேரி** |
| **09.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **மதுரை, சிவகங்கை** |
| **10.04.2024 (புதன்கிழமை)** | **தேனி, திண்டுக்கல்** |
| **12.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **திருப்பூர், நீலகிரி** |
| **13.04.2024 (சனிக்கிழமை)** | **கோவை, பொள்ளாச்சி** |
| **15.04.2024 (திங்கட்கிழமை)** | **திருவள்ளூர் வடசென்னை** |
| **16.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர்** |
| **17.04.2024 (புதன்கிழமை)** | **தென்சென்னை, மத்திய சென்னை** |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

மா.சுப்பிரமணியன் - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா - க.தனசேகரன் - ஜி.ஸ்டாலின் - கே.கண்ணன் பங்கேற்பு!

# கலைஞர் நகர் வடக்கு பகுதி வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மு.இராசா அறிவிப்பு!

*சென்னை. மார்ச். 23*

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் வடக்கு பகுதி கழகத்தில் உள்ள வட்டங்களின் செயல்வீரர்கள் கூட்டம் நாளை (24.3.2024 ஞாயிற்றுக்கிழமை) அந்தந்த வட்டங்களில் நடைபெறுகிறது.

காலை 9 மணிக்கு, 128 (அ) வட்டம், வட்டக் கழக அலுவலகம், ஆற்காடு சாலையில் வட்டக் கழகச் செயலாளர் வீ.ஏ.ராஜா தலைமையிலும், காலை 10 மணிக்கு, 129 வது வட்டம், பகுதிக் கழக அலுவலகம், ஆற்காடு சாலையில் வட்டக் கழகச் செயலாளர் எஸ்.பாஸ்கர் தலைமையிலும், காலை 11 மணிக்கு, 128 வது வட்டம், வட்டக் கழக அலுவலகம், காந்தி நகரில், வட்டக் கழகச் செயலாளர் மு.கோவிந்தராசன் தலைமையிலும், மாலை 5 மணிக்கு, 129 (அ) வட்டம், காவேரி தெரு, ஐஸ் பேக்டரி அருகில், வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபு தலைமையிலும், மாலை 6 மணிக்கு, 127 (அ) வட்டம், சேமாத்தம்மன் நகர், பொது நலச் சங்கம் அருகில், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.மைக்கேல் தலைமையிலும், மாலை 7 மணிக்கு, 127 வது வட்டம், வட்டக் கழக அலுவலகம், வட்டக் கழகச் செயலாளர் பொன்.வர.லோகு தலைமையிலும் ஆகிய இடங்களில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், தெற்கு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் பணியாற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்க இருப்பதால் அந்த வட்டங்களில் உள்ள செயல்வீரர்கள் கலந்து கொள்ள செய்திடுமாறும், மேலும் இந்த கூட்டத்தில் அனைத்து மாவட்டக் கழக, பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக, பகுதிக் கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயல்வீரர்கள் அனைவரும் அந்தந்த வட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கலைஞர்நகர் வடக்கு பகுதிச் செயலாளர் மு.இராசா தெரிவித்துள்ளார்.





சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் மற்றும் வேட்பாளர் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. இதில் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், நா.எழிலன், கூட்டணி கட்சி தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/ பகுதி/வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மற்றும் பி.எல்.ஏ.2, பி.எல்.சி, என பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

---

நே.சிற்றரசு பங்கேற்பு! மத்திய சென்னை வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து

# சேப்பாக்கம் பகுதி - வட்டங்கள் தோறும் தேர்தல் பணிமனை திறப்பு!

## தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரை! எஸ்.மதன் மோகன் அறிக்கை!

*சென்னை, மார்ச் 23*

மத்திய சென்னைத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து பகுதிக் கழகம் சார்பில் தேர்தல் பணிமனை இன்று திறப்பதுடன் ஏழு வட்டங்களிலும் தேர்தல் பணிமனை திறக்கப்படுகிறது என்று பகுதிச் செயலாளர் எஸ்.மதன் மோகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எஸ்.மதன் மோகன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

சேப்பாக்கம் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு இன்று (23.3.2024, சனிக்கிழமை) மாலை 4.30 மணி அளவில் சேப்பாக்கம் பகுதிக் கழகத்தின் தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து சேப்பாக்கம் பகுதிக்கு உட்பட்ட ஏழு வட்டங்களிலும் தேர்தல் பணிமனை திறக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் இந்தியா கூட்டணியின் மத்திய சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

சேப்பாக்கம் பகுதிக் கழகத் தேர்தல் பணிமனை - 2/35 கிருஷ்ணப்ப தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை - 2.

62வது வட்ட தேர்தல் பணிமனை - 16/54, அக்ரஹாரம் தெரு, சிந்தா திரிப்பேட்டை, சென்னை - 2.

62அ வட்ட தேர்தல் பணிமனை - 97/50, கலவை தெரு, சிந்தாரிப்பேட்டை, சென்னை - 2

63வது வட்ட தேர்தல் பணிமனை - 106/2, ஆதித்தனார் சாலை, ஹாரிஸ் ரோடு, புதுப்பேட்டை, சென்னை - 2.

63அ வட்ட தேர்தல் பணிமனை - கோபால் தாஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை - 2.

114வது வட்ட தேர்தல் பணிமனை - 3, குப்பு முத்து தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

114அ வட்ட தேர்தல் பணிமனை - 58, சி.என்.கே. ரோடு, சேப்பாக்கம், சென்னை - 5.

115 வது வட்ட தேர்தல் பணிமனை - 20, பெருமாள் முதலில் தெரு, ராயப் பேட்டை, சென்னை - 14.

எனவே சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2 (பாக முகவர்கள்) BLC (பாக உறுப்பினர்கள்), கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர், 9-வது மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன் தெரிவித்துள்ளார்.



தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தி.மு.க. தலைமையிலான 'INDIA' கூட்டணியின் அனைத்துக்கட்சிகளின் கலந்துரையாடல் கூட்டம் நேற்று (22.3.2024) சைதாப்பேட்டை எஸ்.பி.எஸ் திருமண மண்டபத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. தென் சென்னை நாடாளுமன்ற வெற்றி வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கைது

# ஜனநாயகத்தின் மீதான கொடூரத் தாக்குதல் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, மார்ச் 23-

**டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் அவர்கள் கைது செய்யப்பட்டது ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாட்டின் தலைநகரில் ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை தி.மு.க. வன்மையாகக் கண்டிக்கிறது என்று கூறியுள்ளார்.**



டெல்லி அரசின் மதுபானக் கொள்கை ஊழல் தொடர்பான பண மோசடி வழக்கின் தொடர்பாக அம்மாநிலத்தின் 2 அமைச்சர்களை அமலாக்கத் துறை கைது செய்தது. இருவரும் தற்போது சிறையின் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இதுவரை ஜாமீன் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அம்மாநில முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலிடம் விசாரணை நடத்த வேண்டும் என அமலாக்கத் துறை அவருக்கு சம்மன் அனுப்பியது.

'அமலாக்கத் துறை தனக்கு சம்மன் அனுப்பியது சட்ட விரோதம்; தான் எந்தத் தவறும் செய்யவில்லை' என்று கூறி டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் விசாரணைக்கு ஆஜராக மறுத்து வந்தார்.

கொள்கை உருவாக்கம் இறுதி செய்யப்படுவதற்கு முன் நடைபெற்ற கூட்டங்கள் மற்றும் லஞ்சக் குற்றச்சாட்டுகள் குறித்து கெஜ்ரிவாலின் வாக்குமூலத்தை அமலாக்கத் துறை பதிவு செய்ய விரும்புகிறது. ஆனால், இந்த சம்மன்கள் சட்டவிரோதம் எனவும், அரசியல் உள்நோக்கம் கொண்டவை எனவும் கெஜ்ரிவால் கூறிவந்தார்.

அவர் விசாரணையை தவிர்ப்பது தொடர்பாக 2 புகார் மனுக்களை டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை சமீபத்தில் தாக்கல் செய்தது.

### புகார்கள் தொடர்பான ஆவணங்களை கெஜ்ரிவாலிடம் வழங்குமாறு உத்தரவு!

இவ்வழக்கில் கெஜ்ரிவால் சமீபத்தில் நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது அமலாக்கத் துறை சம்மன்களைத் தவிர்ப்பது தொடர்பான வழக்கில் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் வழங்கி கூடுதல் முதன்மை பெருநகர மாஜிஸ்திரேட் திவ்யா மல்ஹோத்ரா உத்தரவிட்டார். மேலும், புகார்கள் தொடர்பான ஆவணங்களை கெஜ்ரிவாலிடம் வழங்குமாறு அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்டார்.

அதேவேளையில், இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு கோரி டெல்லி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கெஜ்ரிவால் மனு தாக்கல் செய்தார். ஆனால் அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தப் பின்னணியில் தான், மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை வியாழக்கிழமை இரவு அமலாக்கத் துறை கைது செய்தது.

முன்னதாக இந்த சம்மன்களை எதிர்த்து கெஜ்ரிவால் தரப்பில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, நீதிபதிகள் சுரேஷ் குமார் கெய்த், மனோஜ் ஜெயின் அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

கெஜ்ரிவால் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி ஆஜரானார். அவர் கூறும் போது, "மக்களவை தேர்தல் நெருங்கும் நேரத்தில் முதல்வர் கெஜ்ரிவாலை கைது செய்ய அமலாக்கத் துறை முயற்சி செய்கிறது. இதற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்" என்றார்.

### வழக்கின் அடுத்த விசாரணை ஏப். 22ஆம் தேதி நடைபெறும்!

அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி.ராஜு, "கெஜ்ரிவால் விசாரணைக்கு ஒத்துழைப்பு தர மறுக்கிறார். பலமுறை சம்மன் அனுப்பியும் அவர் ஆஜராகவில்லை. அவருக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் உள்ளன" என்று தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், "கைது நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும் என்று கெஜ்ரிவால் தரப்பில் கோரப்படுகிறது. இப்போதைய நிலையில் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது. வழக்கின் அடுத்த விசாரணை ஏப்ரல் 22ஆம் தேதி நடைபெறும்" என்று தெரிவித்தனர்.

கைது நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை விதிக்க உயர்நீதிமன்றம் மறுத்துவிட்ட நிலையில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு டெல்லியில் உள்ள கெஜ்ரிவாலின் வீட்டுக்குச் சென்று சோதனை நடத்தினர். அவரிடம் சுமார் 2 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. இரவு 9.20 மணி அளவில் அவர் கைது செய்யப்பட்டார்.

டெல்லி அமலாக்கத்துறை அலுவலகத்தில் வைத்து கெஜ்ரிவாலிடம் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தினர். மருத்துவக்குழுவினர் அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு வந்து கெஜ்ரிவாலுக்கு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

### கெஜ்ரிவால் கைதினைக் கண்டித்து முதல்வர் வலைதளப் பதிவு!

இதைத்தொடர்ந்து, அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் நீதிபதி பவேஜா முன்பு ஆஜர்படுத்தப் பட்டார். அரவிந்த் கெஜ்ரிவாலை 10 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க அமலாக்கத்துறை கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கிடையே, அரவிந்த் கெஜ்ரிவால் கைது நடவடிக்கைக்கு எதிராக தேர்தல் ஆணையத்தில் "இந்தியா" கூட்டணி சார்பில் நேற்று மாலை புகார் அளிக்கப்பட்டது.

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நாட்டின் தலைநகரில் ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை தி.மு.க. வன்மையாக கண்டிக்கிறது" என்று கூறியுள்ளார்.**

---

கலாநிதி வீராசாமி ஆதரித்து ! ஆர்.டி.சேகர் தலைமை ! ஐட்ரீம் இரா.மூர்த்தி- என்.நவீன் முன்னிலை !

## இராயபுரம் தொகுதி சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை !

சென்னை, மார்ச்.23-

இந்திய கூட்டணி ஆதரவு பெற்ற டாக்டர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் தொகுதி சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (23.03.24 சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் அறிவகம் இராயபுரத்தில் நடைபெறுகிறது.

இதில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார். ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இராயபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் என்.நவீன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் த.ஜெயபாலன், எம்.கே.இஸ்மாயில், பி.சேகர், கு ரமேஷ், கு.சுந்தர், சு.திருஞானம், பி.ஜெயலட்சுமி, வி.மலையம்மாள், லோ.மோகன், இ.மதன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் கழக அமைப்பு செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தா.இளைய அருணா, பி.டி.பாண்டி செல்வம், ந.மனோகரன், எம்.எஸ்.திரவியம், சி.சௌந்தர், சு.ஜீவன், எல்.சுந்தர்ராஜன், கு.வேம்புலி வெங்கடேசன், கமுதி சம்சுதின், இராயபுரம் அலி, கே.அல்லாபகஷ், மாறன், முகமது பாருக்,

மு.கோபி, க.நாகம்மை, வே.சிவக்குமார், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், வி.விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி, ஆர்.சுரேஷ்குமார் எம்.சி, கீதாசுரேஷ் எம்.சி, பா.வேளங்கண்ணி எம்.சி, லயோலா கே.மதன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, கார்த்திக் செங்குட்டுவன், க.கோவிந்தசாமி, லியோ டி.சுரேஷ், ஜெ.கே.நாதன், எம்.தீனதயாளன், ஆர்.வி.லட்சுமிவேலு, எம்.நஜ் மஷரிப், சக்தி டி.நாகேந்திரன், எ.ஜெ.காலணி சிவா, கோமகன், டி.விஜயகணேசன், ஜில்லாணி, எஸ்.பவானி, முகமது ரஃபி, எ.தஸ்தா, அப்துல்ரஹ்மான், இரா.பாலன், எம்.எல்.ரவி, எல்.சீனிவாசன், காட்டன் ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், எல்.பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன்,

இராயபுரம் பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர்நன்றிகூறுகிறார்கள்.

---

## திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பணிக் குழு!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



| வ. எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி |
|---|---|---|---|
| 1 | காரம்பாக்கம் க.கணபதி, M.L.A., | தலைவர் | தி.மு.க. |
| 2 | நொளம்பூர் வே. ராஜன், M.C., | | தி.மு.க. |
| 3 | அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி | | தி.மு.க. |
| 4 | வ.செல்வக்குமார், M.C., | | தி.மு.க. |
| 5 | வீர. கனிமொழி | | தி.மு.க. |
| 6 | முகப்பேர் K.நீலகண்டன் | | தி.மு.க. |
| 7 | அ.விஜயபாலா | | தி.மு.க. |
| 8 | V.ராஜேஷ் | | தி.மு.க. |
| 9 | K.குமரேசன் | | தி.மு.க. |
| 10 | S.P.அருள் | | தி.மு.க. |
| 11 | தளபதி S.பாஸ்கர் | தொகுதி ஒருங்கிணைப்பாளர் | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 12 | D.C.ராஜேந்திரன் | வடசென்னை மேற்கு மாவட்ட செயலாளர் | ம.தி.மு.க. |
| 13 | வி.தாமஸ் | தொகுதி செயலாளர் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) (CPM) |
| 14 | பா.கருணாநிதி | மாவட்ட செயலாளர் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) |
| 15 | தேவ.ஞானமுதல்வன் | மாவட்ட செயலாளர் | விடுதலை சிறுத்தைகள் கட்சி |
| 16 | S.வேல்சாமி | தொகுதி பொறுப்பாளர் | திராவிடர் கழகம் |
| 17 | மடுவை S.பீர் முகம்மது | மாவட்ட தலைவர் | இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (IUML) |
| 18 | A.ஃபாசில் முகம்மது | மாவட்ட செயலாளர் | மக்கள் நீதி மய்யம் |
| 19 | A.P.அஸ்காப் | மாவட்ட செயலாளர் | மனித நேய மக்கள் கட்சி |
| 20 | B.பன்னீர் செல்வம் | மாவட்ட செயலாளர் | ஆம் ஆத்மி கட்சி |
| 21 | P.சுபாஷ் | மாவட்ட செயலாளர் | சமத்துவ மக்கள் கழகம் |
| 22 | சத்ரியன் து.வேணுகோபால் | மாநில துணை செயலாளர் | தமிழக வாழ்வுரிமைக் கட்சி (TVK) |
| 23 | BHEL கு.ராஜன் | தலைமை செயற் குழு உறுப்பினர் | திராவிடர் இயக்க தமிழர் பேரவை |
| 24 | S.ஹரிஹரகுமரன் | மாவட்ட செயலாளர் | தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி |
| 25 | M.மூர்த்தி | சென்னை மண்டல அமைப்பாளர் | முக்குலத்தோர் புலிப்படை |

**தேர்தல் பணிக் குழு**
**திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி**

---

கோரிக்கைகளை நிறைவேற்றி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து நன்றி

## நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளிலும் வாக்கு சேகரிப்பு!

### கோவில் பூசாரிகள் நலச் சங்க தலைவர் பி.வாசு அறிக்கை!

*சென்னை, மார்ச் 23 -*

*கோவில் பூசாரிகள் நலச் சங்கம் விடுக்கும் கோரிக்கைகளை அவ்வப்போது நிறைவேற்றி அதற்காக அரசாணை களை வெளியிட்டு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அதன் தலைவர் பி.வாசு, முதல மைச்சரைச் சந்தித்து ஆதரவு தெரிவித்த பின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் 39 தொகுதிகளிலும் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து கோவில் பூசாரிகள் நலச்சங்கத் தலைவர் பி.வாசு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-*

*முதலமைச்சர் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் அவர்கள் சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச்சங்கம் சமர்ப்பிக்கும் நியாயமான கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்து நடைமுறைப்படுத்தி வருவதற்கு மனமார்ந்த நன்றி.*

*இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும் 15,000 திருக்கோவில்களில் எவ்வித ஊதியமும் இன்றி பணியாற்றிவந்த பூசாரிகளுக்கு முதல்முறை யாக மாதம் ரூ 1,000 ஊக்கத் தொகை வழங்கி அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வைத்தது.*

*கிராமப்புற திருக்கோவில் களில் பணியாற்றி ஓய்வு பெற்ற 60 வயதிற்கும் மேற்பட்ட வறிய பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியத் தொகையை ரூ. 4,000 ஆக உயர்த்தி அவர்களின் வறுமையைக் களைய வழிவகை செய்தது.*

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள சிதிலமடைந்த திருக்கோவில்களைச் சீரமைக்க திருப்பணி நிதியுதவியை ரூ. இரண்டு லட்சமாக தமிழக அரசு மகத்தான அளவில் உயர்த்தியது.*

*ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்த திருப்பணி நிதியில் 18 சதவீதம் அதாவது கிட்டத்தட்ட 39 ஆயிரம் ரூபாய் ஜி.எஸ்.டி. வரிப் பிடித்தம் செய்தது தமிழ்நாட்டில் உள்ள லட்சோப லட்சம் பக்தர்களின் மனதைப் பெரிதும் பாதித்தது. இத்தகைய வரிப் பிடித்தத்தை ஒன்றிய அரசு ரத்து செய்ய தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச்சங்கம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்தது.*

---

காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் "இந்தியா" கூட்டணியில் போட்டியிடும்

## கழகவேட்பாளர் க.செல்வம் 25-ஆம்தேதி காஞ்சிபுரத்தில் வேட்புமனு தாக்கல்!

### கூட்டணி கட்சியினர் திரண்டு வந்து பங்கேற்கும் படி
### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் வேண்டுகோள்!





காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் "இந்தியா" கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் க. செல்வம் அவர்கள் வருகிற 25.03.2024 திங்கள்கிழமை பகல் 12.00 மணியளவில் வேட்புமனு தாக்கல் செய்ய, காஞ்சிபுரம் அன்னை இந்திரா காந்தி சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி அலுவலகம் முன்புள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் சென்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

காஞ்சிபுரம் வடக்கு - தெற்கு மாவட்டத்தில் அடங்கிய காஞ்சிபுரம் -உத்திரமேரூர் - செங்கல்பட்டு - திருப்போரூர் - மதுராந்தகம் - செய்யூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய "இந்தியா" கூட்டணி கட்சிகளில் இடம் பெற்றுள்ள தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் அனைவரும் இந்த வேட்புமனு தாக்கல் நிகழ்ச்சியில் திரண்டு வந்து பங்கேற்கும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| அமைச்சர் **தா.மோ.அன்பரசன்** | **க.சுந்தர், எம்.எல்.ஏ.** |
| செயலாளர், | செயலாளர், |
| காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. | காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. |

---



டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் கைது செய்யப்பட்டதையொட்டி ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தலைமையில் நேற்று (22.3.2024) சென்னை தெற்கு இரயில்வே பொது மேலாளர் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திராவிட மாடல் - ஒரு பரிணாமப் பார்வை!

**நேற்றைய தொடர்ச்சி**

தமிழக மக்களின், மாணவர்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை, மனதில் கொண்டு, இந்தியத் துணைக்கண்டம் முழுதும் மும்மொழி திட்டம் அமுலில் இருந்தபோது, தமிழில் இரு மொழி திட்டம் கொணர்ந்து, தமிழ், ஆங்கிலம் இரண்டு மட்டும்தான், இங்கு இந்திக்கு இடமில்லை என்று தீர்மானம் இயற்றினார்.. பதவி ஏற்கும் போது கடவுள் பெயரால் என்று சொல்லி பதவி ஏற்காது மனசாட்சிப்படி - உளமார எனச் சொல்லி பதவி ஏற்றார். ஆகாஷ்வாணி என்பது வானொலி என அழைக்கப்பட்டது. ஏழை எளியோருக்கு பயன்படும் வகையில் சென்னை, கோவை இரு நகரங்களிலும் ரூபாய்க்கு 1 படி அரிசி வழங்கியது. புன்செய் நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டது. பேருந்துகள் அரசுடைமை ஆக்கப்பட்டது.

ஏழைகளுக்கு பி.யு.சி வரையில் இலவசக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கலப்பு மணம் செய்து கொள்வோரை ஊக்கப்படுத்தும் விதத்தில் தங்க விருது அளிக்கப்பட்டது. சென்னையில் உள்ள குடிசை வாசிகளுக்கு தீ பிடிக்காத வீடுகள் கட்டித் தந்தார். சீரணி எனும் ஓர் அமைப்பைத் தொடங்கி மக்களை அதில் ஈடுபடுத்தி தங்கள் பகுதிக்குத் தேவைப்படுகிற சிறிய, சிறிய வசதிகளை தாங்களே எந்தப் பலனும் எதிர்பாராமல் செய்துகொள்வது என்கிற திட்டம் கொண்டுவந்தார்.

1968-ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையிலே நடத்தினார். கடற்கரைச் சாலையில் தமிழ்ச் சான்றோர்களுக்குச் சிலை நிறுவினார். (திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், ஜி.யு.போப், பாரதியார், பாரதிதாசன், ஔவையார், கண்ணகி, கால்டுவேல், உ.வே.ச.) பள்ளிகளில் என்.சி.சி. அணியில் இந்தி சொற்களை நீக்க ஆணை பிறப்பித்தார். அரசு அலுவலகங்களில் உள்ள கடவுளார் படங்களை நீக்க ஆணை பிறப்பித்தார். முதல்வரானதும், அரசு அதிகாரிகள் அமைச்சர்கள் செல்லும் விழாக்களுக்கெல்லாம் அவர்களை பின் தொடராமல் தங்கள் பணியைச் செய்யலாம் என சுற்றறிக்கை அனுப்பினார்.

சென்னை செகரட்டேரியட் என்பதனை தலைமைச் செயலகம் என மாற்றியமைத்தார். விதவைத் திருமணம் செய்து கொள்வோருக்கு ஊக்கப் பரிசு வழங்கி சிறப்பித்தார். இப்படி ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் பெரியாரின் கனவுகளில் பலவற்றையும் நனவாக்கி கம்பீரமான ஆட்சி தந்த அண்ணாவின் உடல்நலம் குறைந்து அமெரிக்கா சென்று மருத்துவம் பார்த்தும் 3 பிப்ரவரி 1969 அன்று பேரறிஞர் வாழும் வரலாறானார்.

தமிழக அரசியல் வானில் கலவர மேகம் சூழ்ந்தது....இருள் கிழித்து கிளம்பும் ஞாயிறு போல அண்ணாவின் தம்பி கலைஞர் கருணாநிதி 9 பிப்ரவரி 1969 இல் முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்டார்...பெரியார் காட்டிய வழியில் அண்ணன் விட்டுப் போன வேலையை சுறுசுறுப்பாக நிறைவேற்றி காட்டினார் கலைஞர்.... 62 ஆண்டுகள் சட்டமன்றப் பணி 50 ஆண்டுகள் கட்சியின் தலைவர் பணி, 5 முறை முதலமைச்சர் பணி, 13 முறை தோல்வி காணாத சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்த கலைஞரின் சாதனைகள் எண்ணிலடங்காது. இத்தனை பணிகளுக்கிடையே அவர் எழுத்துப் பணியையும் விடவே இல்லை. நாடகம் திரைப்படம், இலக்கியம்,ஊடகம், சின்னத்திரை, அரசியல் களம் என அவர் தொடாத துறையே இல்லை. திரையில் எதையெல்லாம் சீர்திருத்தம் என்று சொன்னாரோ அவற்றை எல்லாம் ஆட்சி பீடம் ஏறியதும் ஒவ்வொரு திட்டமாக நிறைவேற்றினார் .

குறிப்பாக அரசு போக்குவரத்து துறை உருவாக்கி பேருந்து போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்கியது மின்சாரம் அனைத்து கிராமங்களுக்கும் செல்ல வழித்தடம் அமைத்ததுடன் அனைத்து கிராமங்களுக்கும் சாலை வழித்தடம் அமைத்தது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் குடிநீர் வடிகால் வாரியம் அமைத்து ஏழைகளுக்கு வீடும் எல்லாருக்கும் சுத்தமான குடிநீருக்கும் வழி வகை செய்தார்..

இலவச கண்ணொளித் திட்டம் பிச்சைகாரர்கள் மறுவாழ்வு இல்லம்

கை ரிக்ஷா ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷா இலவச கான்கிரீட் வீடுகளை ஒடுக்கப்பட்டோருக்கு கொடுக்கும் திட்டம் மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம் மே 1, சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை என அடித்தட்டு மக்களின் மீது அக்கறை கொண்டே திட்டங்கள் தீட்டினார்.இந்தியாவிலே முதன் முதலில் காவல் துறை ஆணையம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கென துறைகள் அமைத்தது.

அரசு ஊழியர்கள் குடும்ப நல திட்டம் சேலம் இரும்பு தொழிற்சாலை நெய்வேலி இரண்டாம் அலகு நிலக்கரி மின்உற்பத்தி தூத்துக்குடியில் பெட்ரோல் மற்றும் ரசாயன தொழிற்சாலை கொண்டு வந்தது SIDCO , SIPCOT உருவாக்கியது. உருது பேசும் இஸ்லாமியர்களை பிற்படுத்தபபட்டோரில் தமிழ் இஸ்லாமியர்கள் போல் சேர்த்து கொங்கு வேளாளர் இனத்தை பிற்படுத்தபபட்டோரில் இணைத்து மிகவும் பிறப்படுத்தபபட்டோரில் வன்னியர், சீர் மரபினரை சேர்த்து 20% தனி இட ஒதுக்கீடு தந்தது. அருந்ததியின மக்களுக்கு 3% தனி இட ஒதுக்கீடு பழங்குடியினருக்கு 1% தனி இட ஒதுக்கீடு தந்து சமூக நீதியை நிலைநாட்டினார் .

இந்தியாவிலே முதன் முறையாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தந்தது சொத்தில் பெண்ணுக்கு சம உரிமையை சட்டமாக்கியது. அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு தந்தது. உள்ளாட்சி பதவிகளில் 33% பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வந்தது ஏழை பெண்களுக்கு திருமண நிதி உதவி விதவை பெண்கள் மறுமண நிதி உதவி கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி திட்டம் என பெண்களின் முன்னேற்றத்தில் தனி கவனம் செலுத்தினார் நேரடி நெல் கொள்முதல் மையம் தந்து நெல் கொள்முதலில் ஊக்கத்தொகை மற்றும் விலை ஏற்றம் செய்தது.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அமைத்தது +2 வரை இலவசக் கல்வி தந்தது தொழிற் கல்வியில் கிராமபுற மாணவர்களுக்கு 15% இடஒதுக்கீடு செய்தது ஆசியாவிலே முதன் முறையாக கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் பல்கலைக் கழகம்அமைத்தது முதல் விவசாயக் கல்லூரி (கோவை) உருவாக்கியது. மனோன்மணியம் சுந்தரனார், பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைகழகங்கள், டாக்டர் MGR மருத்துவ கல்லூரி நிறுவியது சமச்சீர் கல்வி கொண்டு வந்தது சென்னைக்கருகில் பன்னாட்டுத் தரம் வாய்ந்த கடல்சார் தேசிய பல்கலைக் கழகம் (National MarnieUniversity), திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம் (Central University),

கோவையில் உலகத் தரத்திலான மத்தியப் பல்கலைக் கழகம், திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம். (IIM).ஆசியாவிலேயே முதலாவதாக சென்னைக்கு அருகில் ஒன்றுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்றோர்க் கான தேசிய நிறுவனம்.திருச்சியில் தேசிய சட்ட கல்லூரி (National Law School), தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் என உயர் கல்வியில் தனி கவனம் செலுத்தினார். முன்னாள் பிரதமர் V.P. சிங் காலத்தில் காவிரி நடுவர் மன்றம் அமைக்க வைத்தது, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு தேர்தல் கொண்டுவந்தது, மெட்ராஸ் என்பதை சென்னையாக மாற்றியது, ஐயன் திருவள்ளுவருக்கு வானுயர சிலை வைத்தது,

தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றுத் தந்து செம்மொழி மாநாடு நடத்தியது, தமிழக விவசாயிகளுக்கு 7000 கோடி விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்து,இந்தியா முழுவதும் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் வாங்கி இருந்த 72000 கோடி UPA அரசால் ரத்து செய்ய வைத்து சமத்துவபுரம், உழவர் சந்தை தந்து விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றி வைத்தார்.

டைடல் பார்க் முதல் ELCOT IT SEZ பார்க்குகளை கொண்டு வந்தார். இந்தியாவிலே முதன் முதலாக சென்னை அண்ணா மேம்பாலம் முதல் கோவை அடுக்குமேம்பாலம் போன்ற பல நகரங்களில் பல்வேறு மேம்பாலங்கள் கட்டியது கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் 56 ஆயிரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய்ச் செலவில், 4,676 கிலோ மீட்டர் நீள தேசிய நெடுஞ் சாலைகளில், 3,276 கிலோ மீட்டர் சாலைகள், நான்கு வழிச் சாலைகளாக மேம்பாடடைய செய்தது, ஆசியாவிலேயே மிகப் பெரிய பேருந்து நிலையமான கோயம்பேடு பேருந்து நிலையம் கட்டியது திராவிடக் கலைநுணுக்கத்தோடு புதிய தலைமைச் செயலகம் கட்டியது, ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் மத்திய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம்,

கிண்டி கத்திபாரா, கோயம்பேடு, பாடி போன்ற இடங்களில் உள்ள மிகப் பெரிய மேம்பாலங்கள், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள போன்றவை இந்த காலகட்டத்தில் உருவாகின. கரூர், ஈரோடு &சேலம் ஆகிய மூன்று இடங்களில் சுமார் நானூறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்தொழில்நுட்ப ஜவுளி பூங்கா, சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நல்வாழ்வு திட்டங்களை நிறைவேற்றி காட்டியவர் தலைவர் கலைஞர்.

1960களில் மேற்கு வங்காள மாநிலத்தின் தனிநபர் வருமானம் ஒரு ஆண்டுக்கு 390 ரூபாய், தமிழ்நாட்டில் 330 ரூபாய். ஆனால், 2011 இல் மேற்கு வங்காள மாநிலத்தின் தனிநபர் வருமானம் ஒரு ஆண்டுக்கு 80,000, தமிழர்களின் சராசரி வருடாந்திர வருமானம் 1,36,000 ரூபாய். 1960இல், இந்தியாவின் ஏழை மாநிலமாகத் திகழ்ந்த தமிழ்நாடு 2011 இல் நாட்டின் பணக்கார மாநிலங்களில் ஒன்றாக மாறியிருக்க அளப்பரிய பங்களிப்பு செய்தவர் தலைவர் கலைஞர் என்பது எதிரிகளும் மறுக்க முடியாத உண்மை.9 பிப்ரவரி 1969 முதல் 7 ஆகஸ்ட் 2018 வரை தமிழ் நாட்டின் முதல்வராக அல்லது எதிர்க் கட்சித் தலைவராக தன்னை சுற்றியே அரசியல் நிகழ்வுகளை நிலை நிறுத்திக் கொண்டார்.. 03 ஜூன் 1924 லிருந்து சுவாசிக்க ஆரம்பித்து 7 ஆகஸ்டு 2018 அன்று...பேரறிஞர் அண்ணாவிடம் தான் பெற்ற எதையும் தாங்கும் இதயத்தை திரும்ப கொண்டு ஒப்படைக்க தன் சுவாசம் நிறுத்தி புறப்பட்ட நாள் வரையில் வரலாறாக வாழ்ந்தவர் தலைவர் கலைஞர்.

நவீன ஜனநாயகக் குடியரசுகளின் தந்தை என்று போற்றப்படும் ஜெனிவாவின் அரசியல் தத்துவஞானி ஜீன் ரூசோ தனது சமூக ஒப்பந்தம் (Social Contract) என்ற புரட்சிப் புத்தகத்தில், "ஜனநாயக ஆட்சிமுறை என்பதே தேசத்தின் ஒவ்வொரு தனிமனிதருக்கும், அரசியல் இயக்கத் தலைவருக்கும் இடையே ஏற்படும் எழுதப்படாத ஒப்பந்தம்தான்" என்று வரையறுத்துள்ளார். இந்த வரையறைக்குள் நின்று வென்று திமுக தலைவர் 7.5.2021ல் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதல்வர் பொறுப்பேற்றார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளில், 2,07,57,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரானா உதவித்தொகை மே, மாதத்தில் ரூ. 2000/ வழங்கவும், ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3/ குறைக்கவும், தமிழ் நாடு முழுவதும் நகரப் பேருந்துகளில், மகளிர் இலவசப் பயணம் மேற்கொள்ளவும், மக்களிடம் பெற்ற மனுக்களுக்கு உடனடி தீர்வு காண, "உங்கள் தொகுதியில் முதல்வர்" என்ற திட்டத்தை துவங்கவும், கொரானா பெருந்தொற்று காலத்தில் பொது மக்கள் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் செலவை அரசே ஏற்கும் எனவும், 5 வாக்குறுதிகளை நிறைவேற்றி, முதல்வராக முதல் நாளை முத்தாய்ப்பாக துவங்கினார். வேளாண்துறைக்கென தனி பட்ஜெட்டைத் தந்து, (ரூ.42,220/ கோடி ஒதுக்கீடு) செய்து 100 நாள் வேலைத் திட்டம் 150 நாளாக உயர்வு, சிறுகுறு விவசாயிகள் கடன் தள்ளுபடி, வேளாண் மகளிர் மானியம், ஏழை விவசாயிகளுக்கு மின் மோட்டார் மானியம், மஞ்சள் ஆராய்ச்சி மையம் 2,00,000 விவசாயிகளுக்கு புதிய மும்முனை மின் இணைப்பு என விவசாயிகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது பள்ளிக் கல்வித் துறையில் 17 லட்சம் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், பேராசிரியர் அன்பழகனார் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம், அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு, (ரூ.44495.89/ கோடி) ஒதுக்கீடு...மற்றும் உயர் கல்வித் துறையில் 11 புதிய கலை, அறிவியல் கல்லூரிகள், மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி, ஆங்கில உரையாடல் வகுப்புகள், நான் முதல்வன் திட்டம், பெருந்தலைவர் காம ராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம், நீட் தேர்வு ரத்து தொடர்பான நடவடிக்கை என (ரூ. 7668.89/ கோடி ஆக, மொத்தம் ஏறத்தாழ ரூ. 52,56478 / கோடி) கல்வி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு (ரூ.2,756 கோடி) கடன் தள்ளுபடி செய்ததோடு,



**- பேரா.கான்ஸ்டன்டைன் ரவிந்திரன்**
கழக செய்தித் தொடர்புச் செயலாளர்

மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறைக்கு (ரூ.20118.73/ கோடி) பெண்கள், குழந்தைகள், முதியோர் என பலதரப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக சமூகநலத்துறைக்கு (ரூ.6922.40/கோடி) பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. உயர் கல்வியில் முன்னு ரிமை அடிப்படையில், 7.5% அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்பது, தமிழகத்தில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர் வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, (317 கோடியே 40 லட்சம் ரூபாய்) நிதி ஒதுக்கீடு செய்வது, 'தமிழ்நாடு ஆதி திராவிடர் பழங்குடியினர் நல ஆணையம்' அமைத்து அயோத்திதாசப் பண்டிதருக்கு மணிமண்டபம் அமைத்தது, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சியின் பெருமையைப் போற்ற 14 அறிவிப்புகள் பாட்டுக்கொரு புலவன் பாரதியைப் போற்றும் வகையில் 14 அறிவிப்புகள் அறிவித்தது, இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் பலியான போராளிகளுக்கு ரூ. 4 கோடி செலவில் மணிமண்டபம் ஏழை, எளிய மக்களின் உடல் நலத்தைப் பேணும் பொருட்டு, 5.8.2021ல், ஆரம்பிக்கப்பட்ட, "மக்களைத் தேடி மருத்துவம்" மூலம் 1,40,00,000பேர் பயனடைந்துள்ளனர். இதே போன்று, விபத்துக்களில் சிக்கித் தவிப்போர்க்கு உதவிடும் பொருட்டு, 18.10.2021 அன்று முதல்வர் துவக்கி வைத்த, "நம்மைக் காக்கும் 48" திட்டத்தின் மூலம் 2.46 லட்சம் பேர் பாதுகாக்கப்பட்டுள்ளனர். கொரானா இடர்பாடுகளால் இடை நின்ற பள்ளி மாணவர்களின் கற்றல் திறன் மேம்படுத்த, 'இல்லம் தேடிக் கல்வி' திட்டம் 27.10.2021 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு, 36.56 லட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர் அரசுப் பள்ளி மாணவர் சேர்க்கையானது 47 லட்சத்திலிருந்து, 53 லட்சமாக உயர்ந்துள்ளது. சமூகத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்கள், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்து இருந்தால் மாதம் ரூ. 1000/ உதவித்தொகை, 'புதுமைப் பெண் திட்டம்' மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஏறத்தாழ 2 லட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர்.மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம் 3 லட்சம் மாணவர்களுக்கு இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது .

கோவிலுக்கு சொந்தமான 5000 கோடி மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளது . அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று அறிவித்து ஆண்டவனின் சன்னிதானத்தில் சமூக நீதி நிலை நிறுத்தப் பட்டுள்ளது.

மாநிலத்தின் முன்னேற்றத்தில், தொழில் வளர்ச்சி முக்கிய பங்காற்றுகிறது. 2011ல், தொழில் வளர்ச்சியில் முதலிடத்தில் இருந்த தமிழ் நாடு, 2021ல், 14வது இடத்திற்கு தள்ளப்பட்டது. முதல்வர் அவர்களின் தொடர் முயற்சியாலும், ஒற்றைச் சாளர அனுமதி முறையினாலும் தொழில் துவங்க உகந்த மாநிலங்களில் 3வது இடத்திற்கு மீட்கப்பட்டது. வெளி நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு நம் மாநிலத்தின் உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை எடுத்துரைத்து, அன்னிய முதலீட்டாளர்களை தமிழகம் நோக்கி இழுத்ததால் ஏறத்தாழ 10 பில்லியன் டாலர் அளவிற்கு, அன்னிய முதலீடு கிடைக்கப்பெற்றது. அதன் மூலம், 2 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் உருவானது. இந்தியாவின் 15.7% தொழிற்சாலைகளை தன்னகத்தே கொண்டு, 38,837 தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கிறது. இதன் விளைவாக, மாநிலத்தின் மொத்த உற்பத்தி வெகுவாக உயர்வதுடன், தனி நபர் வருமானம் 2 லட்சமாக உயர்ந்துள்ளது. பணவீக்க விகிதம் தேசிய அளவில், கடந்த ஏப்ரல், மே மாதங்களில், தேசிய பணவீக்க சராசரி 8%மாக இருந்தபோது, தமிழ் நாட்டில் 5.4%மாக இருந்தது. முதல்வரின் தனித்துவ செயலூக்கத்தின் வழியே, குறுகிய காலத்தில் நிறைய வாக்குறுதிகளை நிறைவேற்றி, எதிரிகளும் மதிக்கும் வண்ணம் உன்னதமான ஆட்சியை முன்னெடுத்து செல்வதால்தான் இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தமிழ்நாட்டின் பொருளாதார வளம் தருகிறது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (G.D.P) அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது இது போன்ற சாதனைகளை பட்டியலிட்டு பாராட்டி 'இந்தியா டுடே' பத்திரிக்கை இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழகத்தையும், முன் மாதிரி முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்களையும் சிறப்பித்து மகிழ்ந்தது. இன்றைய முதல்வரின் ஆட்சி... தலைவர் கலைஞர் ஆட்சியின் தொடர்ச்சி.... சுருங்கச் சொன்னால்.. பேரறிஞர் அண்ணா.. தலைவர் கலைஞர்... தளபதி ஸ்டாலின். இவர்களின் ஆட்சிக்கு 1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் ஐயா பெரியார் தந்த **தீர்மானங்களே கட்டளை....கட்டளையே திராவிட மாடலின் சாசனம்.**



கோவையில் கழக வர்த்தகர் அணி சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கலை நிகழ்ச்சியில் கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேசினார். கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

## இந்த ஓராண்டு மட்டுமல்ல - வரும்

# நூறாண்டும் கலைஞர் புகழ் உலகளவில் பேசப்படும்!

### கழக வர்த்தகர் அணி சார்பில் நடைபெற்ற கோவை விழாவில் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேச்சு!

*கோவை, மார்ச் 23*

கோவையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கலை இரவு நிகழ்ச்சியில் கழக வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேசும் போது, "இந்த ஓராண்டு மட்டுமல்ல வரும் நூறாண்டும் கலைஞர் புகழ் உலகளவில் பேசப்படும்" எனக் குறிப்பிட்டார்.

விழாவில் கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேசியதாவது:-

காமராஜர் இருவரை பிரதமராக காட்டினார். முத்தமிழறிஞர்கலைஞரோ நான்கு தோழர்களை பிரதமராக உருவாக்கியவர். ஆமாம் 1989-ல் வி.பி.சிங், சந்திரசேகர், 1996-ல் முதலில் தேவகவுடா பின் குஜ்ரால் என நான்கு பிரதமர்களை உருவாக்கினார். மன்மோகன்சிங்கையும் கூட சேர்த்துக்கொள்ளலாம்.

கடவுளை கண்டவனும் இல்லை, தேர்தலில் கலைஞரை வென்றவரும் இல்லை. 13 முறையும் வெற்றி கண்டவர்.

கலைஞரை ஈரேழு தலைமுறையும் பின்பற்றும்.

கலைஞர் கொண்டு வந்த தமிழறிஞர் கோட்டாவில் டாக்டர் ஆன தமிழிசை சௌந்தரராஜன் இராஜினாமா செய்து மக்கள் சேவை செய்ய வருகிறாராம். அப்படி ஆனால் இரண்டு மாநிலத்திலும் மக்கள் சேவை செய்யவில்லை. முதல்வர்களுக்கு இடையூறு செய்யத்தான் போனேன் என்பதை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

இதற்கு முன் பலர் ராஜினாமா செய்து அரசியலுக்கு வந்ததுண்டு. ஆனால் அவர்கள் இராஜினாமா செய்து இரண்டு ஆண்டுகள் கழித்து அரசியலுக்கு வந்துள்ளனர். ஆனால் வாயில் தோசை, கையில் காசு என்பது போல இராஜினாமா செய்த கையோடு வாயில் வை காசை என்பதுபோல உடனே உறுப்பினர், உடனே சீட் என்பது ஜனநாயக கேலிக்குறியானது.

அதேபோல் மோடிஜீ தொடர்ந்து வாரிசு அரசியல் என பேசுகிறார். பா.ஜ.க.வின் தமிழக கூட்டணியை கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்.

ராமதாஸ், அன்புமணி, பாரிவேந்தர் மகன் பச்சை முத்து, சசிகலா அக்கா மகன் தினகரன், மூப்பனார் மகன் வாசன்.

தமிழ்நாட்டை நீக்கி, எடியூரப்பா மகன் விஜயேந்திரா கர்நாடகத் தலைவர், மாதவராவ் சிந்தியா மகன் ஜோதி ராத்தியா சிந்தியா தேசிய பொருளாளர், முன்னாள் மத்திய அமைச்சர் ஜோதி மகள் பா.ஜ.க. வேட்பாளர், மேனகா காந்தி மகன் வருண்காந்தி.

2000 நோட்டை செல்லாமல் செய்த உங்களை 2024-ல் செல்லாமல் செய்வோம்.

தமிழுக்காக, தமிழ்நாட்டுக்காக தன் வாழ்நாளெல்லாம் அயராது அரும்பணியாற்றி வந்து முதல்வராக தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதலிடத்திற்குக் கொண்டு வந்த நவீனசிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இந்த ஓராண்டு மட்டுமல்ல வரும் நூறாண்டும் புகழ் உலகளவில் பேசப்படும்.

அவரது வழிநின்று திராவிட மாடல் ஆட்சி நடத்தும் நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மக்களின் உள்ளங்களில் நீக்கமற நிறைந்து நல்லாட்சி நடத்தி வரலாறு படைத்து வருகிறார். அவரது ஓய்வறியா உழைப்பு தமிழ்நாட்டை மேலும் உயர்வடையச் செய்கிறது. அவருக்கு நாம் அனைவரும் என்றென்றும் துணையிருப்போம்! தொண்டாற்றுவோம்! கழகத்தைக் காப்போம்!

இவ்வாறு தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேசினார்.


**சென்னை வடக்கு மாவட்டம், வடசென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட**

**பெரம்பூர், இராயபுரம், ஆர்.கே.நகர் தொகுதி "இந்தியா" கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம்!**



**மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

சென்னை வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் பின்வரும் தேதிகளில் நடைபெறுகிறது.

**சிறப்புரை:**

ஆலந்தூர் **ஆர்.எஸ்.பாரதி**
கழக அமைப்பு செயலாளர்

**பி.கே.சேகர்பாபு**
(இந்து சமய அறநிலைய துறை அமைச்சர்)

| நாள் | நேரம் | தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 23.03.2024 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | இராயபுரம் தொகுதி | அறிவகம் எம்.எஸ்.கோயில் தெரு, இராயபுரம் |
| 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | பெரம்பூர் தொகுதி | பிரணிதா பேலஸ் எத்திராஜ்சாமி சாலை, எம்.ஆர்.நகர் |
| 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை | மாலை 5.00 மணி | ஆர்.கே.நகர் தொகுதி | கேப்டன் மஹால் டி.எச்.ரோடு, தண்டையார்பேட்டை |

சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெறும் செயல்வீரர் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், அந்தந்த பகுதி, வட்டங்களின் "இந்தியா" கூட்டணி, கட்சிகளின் செயலாளர்கள், தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள், வாக்குசாவடி தேர்தல் பணிகுழு உறுப்பினர்கள் (பி.எல்.ஏ.2 - பி.எல்.சி.) கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தி. வேல்முருகன் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கையை பாராட்டி நன்றி தெரிவித்தார்.



சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை கோவில் பூசாரிகள் நலச்சங்கத் தலைவர் பி.வாசு, சந்தித்து தங்களது கோரிக்கைகளை ஏற்று அவ்வப்போது அரசாணைகள் வெளியிடுவதற்கு நன்றி தெரிவித்தும், நடைபெறும் தேர்தலில் தங்களது சங்கத்தினர் 40 தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரிப்பதாகவும் தெரிவித்தனர்.

### வரும் நாடாளுமன்றத் தேர்தலில்

# இந்தியா கூட்டணிக்கு பூலித்தேவன் மக்கள் கழகம் ஆதரவு!

## நிறுவனத் தலைவர் எஸ்.பெருமாள்சாமி அறிக்கை!

சென்னை, மார்ச் 23-

இந்தியா கூட்டணிக்கு பூலித்தேவன் மக்கள் கழகம் ஆதரவு தெரிவிப்பது என்று அக்கழகத்தின் நிறுவனத் தலைவர் எஸ்.பெருமாள்சாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியை மட்டுமே ஆதரித்து வந்து தற்போது நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு பூலித்தேவன் மக்கள் கழகம் தனது நிபந்தனையற்ற ஆதரவை அளிக்கிறது.

மேலும் பூலித்தேவன் மக்கள் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் தென்காசி மாவட்டம் நெற்கட்டான் செவலில் உள்ள பூலித்தேவர் நினைவு மாளிகையில் வைத்து பூலித்தேவன் மக்கள் கழகத்தின் தலைவர் நெல்லை பெருமாள்சாமி தலைமையில் நடைபெற்றது. மேற்படி செயற்குழுக் கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் த.தயா பாண்டியன், மாநில பொறுப்பாளர் சு.பிரகாஷ், கழக வழக்கறிஞர் அணி செயலாளரும் சட்ட ஆலோசகருமான அ.தினேஷ்குமார், மாநில அமைப்பு செயலாளர் செல்வகுமார், தென் மண்டல இளைஞரணி செயலாளர் அய்யாதுரை பாண்டியன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் நடைபெற உள்ள 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு பூலித்தேவன் மக்கள் கழகம் தனது ஆதரவை அளித்து தி.மு.க. கூட்டணிக்கு இரவு, பகல் பாராமல் விடுவீடாக சென்று துண்டுப் பிரசுரம் வழங்கி வாக்கு சேகரித்து 2021 சட்டமன்றத் தேர்தலில் வென்றது போல் இந் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி வாகை சூட தென் மாவட்டங்களில் தி.மு.க. தலைமையில் கூட்டணி கட்சிகளுக்கு வாக்கு சேகரித்து இமாலய வெற்றி பெற உறுதுணையாக இருப்போம் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றபட்டது.

சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.க. கூட்டணியை ஆதரித்து வரும் கட்சி பூலித்தேவன் மக்கள் கழகம் வெற்றியிலும் சரி தோல்வியிலும் சரி எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் தி.மு.க.வின் உடன்பிறப்புகளோடு முன் நின்று பணி செய்து வரும் நிறுவனத் தலைவர் நெல்லை பெருமாள் சாமியை இந்த செயற்குழு மனமுகர்ந்து பாராட்டுகிறது.

1979 ஆண்டில் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த போது DNT மக்களிடம் இருந்து வாழ்வாதாரத்தை பறித்த எம்.ஜி.ஆர். அதன் பிறகு இரட்டைச் சான்றிதழ் முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்நிலையில் 2021 சட்டமன்றத் தேர்தலில் தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் வேட்பாளர்களை அறிவித்து வாக்குகளை சேகரித்த இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் DNT என்ற ஒற்றைச் சான்றிதழ் முறை நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறினார். மேற்படி கூறியது போல் வெறும் பேச்சாக இல்லாமல் அதை நடைமுறை படுத்தியது நம் முதல்வரே ஆவார். ஆகவே தமிழக முதல்வர் அவர்களுக்கு முக்குலத்து மக்களின் சார்பாக கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சுமார் 300 வருடங்களுக்கு முன்பு சுதந்திரத்திற்காக போராடிய நம் முப்பாட்டன் மாமன்னர் பூலித்தேவர் அவர்கள் வெள்ளையரின் கையில் பிடிபட்டு தூக்கிலிடப் படாத ஒரே நபர் ஐயா பூலித்தேவன் அவர்கள் மட்டுமே. ஆகவே பூலித்தேவன் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழக முதல்வர் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் எண்ணற்ற சாதனைகளை செய்து கொடுத்தார். மீண்டும் சங்கரன்கோவிலில் உள்ள பூலித்தேவன் அறையில் பூலித்தேவன் அவர்களுக்கு வெண்கல சிலையை தமிழக அரசு செய்து கொடுத்திட பணிவுடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இந்தியா கூட்டணிக்கு

# எம்.ஜி.ஆர். கழகம் ஆதரவு!

## எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் இராம.வீரப்பன் அறிக்கை!

சென்னை, மார்ச் 23-

இந்தியா கூட்டணிக்கு எம்.ஜி.ஆர். கழகம் ஆதரவு அளிப்பதென்று அக்கட்சியின் தலைவர் இராம. வீரப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :



எம்.ஜி.ஆர். கழக தலைவர் இராம.வீரப்பன் தலைமையில் மற்றும் பொதுச் செயலாளர் டி.ராமலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினையும் மற்றும் அதன் தோழமை கட்சிகளையும் ஆதரிப்பதாக எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் எம்.ஜி.ஆர். கழக மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் அனைவரும் தங்களுடைய பகுதியில் உள்ள திராவிட முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் இணைந்து கூட்டணி வெற்றி பெற முழு மனதுடன் பாடுபட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024:

# இந்தியா கூட்டணிக்கு - பல்வேறு கட்சிகள் - இயக்கங்கள் ஆதரவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, மார்ச் 23-

நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் புதிய திராவிடர் கழகம் ஈரோடு மாவட்ட சமூக நீதி மக்கள் கட்சி தென்னக அருந்ததியர் மக்கள் முன்னேற்ற கூட்டமைப்பு தமிழக வீரசேவை முன்னேற்ற பேரவை தமிழ்நாடு தியாகராஜ பாகவதர் எம்கேடி பேரவை சமூக நீதிக் கட்சி கோயில் பூசாரி நல சங்கம் தமிழக விவசாயிகள் வாழ்வாதார முன்னேற்ற சங்கம் தென்னிந்திய விஸ்வகர்மா முன்னேற்ற சங்கம் தென்னிந்திய கைவினைஞர் முன்னேற்ற கழகம் ஆகிய கட்சி மற்றும் சங்கத் தலைவர்கள் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (22.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்; புதிய திராவிடர் கழகம் சார்பில் அதன் நிறுவனத்தலைவரும், தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரிய உறுப்பினருமான ராஜ் கவுண்டர் மற்றும் நிர்வாகிகள்;

ஈரோடு மாவட்டத்தில் செயல்படும் சமூக நீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான் பேரவைத் தலைவர் வடிவேல் ராமன் மற்றும் நிர்வாகிகள்,

தென்னக அருந்ததியர் மக்கள் முன்னேற்ற கூட்டமைப்பின் மாநில தலைவர் செங்குட்டுவன் மற்றும் நிர்வாகிகள், கோவில் பூசாரி நல சங்க தலைவர் வாசு மற்றும் மாநில நிர்வாகிகள், தமிழக விவசாயிகள் வாழ்வாதார முன்னேற்ற சங்க தலைவர் பரிமளம் மற்றும் நிர்வாகிகள்,

தென்னிந்திய விஸ்வகர்மா முன்னேற்ற சங்கம், நிறுவனத் தலைவர் சரவணன்; தமிழக வீரசேவை முன்னேற்ற பேரவை, தலைவர் தங்க தமிழ் செல்வன்; தமிழ்நாடு தியாகராஜ பாகவதர் எம்கேடி பேரவை மாநிலத் தலைவர் கவிஞர் ரவி பாரதி, எஸ்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன்; மாநில பொதுச் செயலாளர் சமூக நீதிக் கட்சி சார்பில், மாநில பொதுச்செயலாளர் வெள்ளமடை நாகராசன் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற ஆதரவு அளிப்பதோடு, தி.மு.க. கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா ஆகியோர் உடனிருந்தனர்.

### டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து

# சென்னையில் - ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

## தயாநிதி மாறன் தலைமையில் ஏராளமானோர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 23 -

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, சென்னையில் தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டதற்கு இந்திய கூட்டணிக் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து சென்னையில் திமு.க. சார்பில் மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னையில் உள்ள தெற்கு ரயில்வே தலைமை அலுவலகம் முன்பு கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற போராட்டத்தில் மத்திய சென்னை தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறன் உள்பட நூற்றுக் கணக்கானோர் பங்கேற்று ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

போராட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தயாநிதி மாறன், நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை முடக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு சதி செய்வதாக குற்றம் சாட்டினார். மோடி ஆட்சியில் ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றதாக சி.ஏ.சி. அறிக்கை மூலம் எழுந்த குற்றச்சாட்டில் ஏன் சி.பி.ஐ. விசாரணை நடத்தவில்லை என கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு, கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ் மற்றும் ஆம் ஆத்மி நிர்வாகிகள் ஸ்டெல்லா, ஷோபியா, சுரேந்தர், பரூக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



‘இந்தியா’ கூட்டணியின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வேட்பாளரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் ஆற்காடு நா.வீராசாமி,மற்றும் கழக இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் க. செல்வம் அறிமுக கூட்டம் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஆர்.சுபேர்கான், சன் பிராண்ட் ஆறுமுகம் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் மேயர் திருமதி.மகாலட்சுமி மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



‘இந்தியா’ கூட்டணியின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வேட்பாளரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு, அவர்கள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் கே.எம்.காதர் மொய்தீன் மற்றும் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா ஆகியோரை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

# உடன்பிறப்பே... 50

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக பயணித்து, கழகம் வளர்த்த விளநகர் கணேசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்..

# ‘தியாகத் திருவுளம்’ விளநகர் கணேசன்



ஓவியம் : ரவி பேலட்

**2016**-ஆம் ஆண்டு, தஞ்சை மண்ணின் தளகர்த்தர் கோ.சி.மணி அவர்கள் மறைவின்போது, மருத்துவச் சிகிச்சையில் இருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அவருக்கு உடல்நலம் சரியில்லாத நிலையிலும் வெளியிட்ட இரங்கலில், கொள்கைக் குன்று கோ.சி மணிக்கும் தனக்குமான உறவை கூறியபோது, அன்றைய தஞ்சை ஜில்லாவில் கழகம் வளர்த்த கதையை நினைவுகூர்ந்தார்.

“ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் அந்தக் காலத்தில் உடனடியாக வடபாதிமங்கலம் தியாகராஜன், குன்னியூர் சாம்பசிவம், உக்கடை அப்பாவு, நெடும்பலம் சாமியப்பா போன்ற பெயர்கள் மட்டுமே நினைவுக்கு வந்த காலம் போய், மன்னை நாராயணசாமி, ஆடுதுறை கோ.சி மணி, விளநகர் கணேசன், குடந்தை கே.கே.நீலமேகம் ஆகியோரை நினைக்கும் அளவுக்கு மக்கள் இருக்கின்றனர்” என்றார். அந்த உடன்பிறப்புகளின் வரிசையில், இந்த வாரம் விளநகர் கணேசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

இன்றைய மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியத்தில் உள்ள விளநகர் கிராமத்தில், 1928 -ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 20-ஆம் தேதி பிறந்தவர் கணேசன். உயர்நிலை கல்வியை, குத்தாலத்தில் முடித்தவர், 1945-ஆம் ஆண்டு திராவிட மாணவர் கழகத்தில் இணைத்துக்கொண்டு அரசியலில் பயணப்படத் தொடங்கினார். அதன் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர். கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் தொடக்க உறுப்பினராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

அன்றைய தஞ்சை மாவட்டம் நில உடைமையாளர்கள் ஆதிக்கம் செலுத்திய பூமி, அதிலும் குறிப்பாக மயிலாடுதுறை மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் பிராமணர்களின் ஆதிக்கம் நிறைந்தது. இயல்பாகவே திராவிட வெறுப்பு குடிகொண்டிருக்கும் பூமியில் கழகத்தை வளர்ப்பது சவாலானது. அந்தப் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர் கணேசன்.

மயிலாடுதுறை, குத்தாலம், செம்பனார் கோவில், தரங்கம்பாடி எனச் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கணேசனின் செல்வாக்கு கழகத்தின் செல்வாக்காக இருந்தது என்றால் மிகையில்லை. கழகம் அறிவிக்கும் அத்தனை போராட்டங்களுக்கும் மக்களை அணிதிரட்டுவதிலும், முன்னணியில் நிற்பதிலும் சளைக்காதவர் கணேசன். சிறை செல்லவும் தயங்காமல் முன்நின்றவர்.

## சிறை வாழ்க்கை

1962 -ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கலந்துகொண்டு இரண்டு மாதங்கள் சிறையில் இருந்தார். கல்லக்குடிப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் எனக் கழகத்தின் சிறை நிரப்பும் போர்களில் எல்லாம் கணேசன் பெயர் இருக்கும்.

1965-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டபோது, தஞ்சை மாவட்டத்தில் இருந்து, அரிசிக் கடத்தல் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன. அதைத் தடுப்பதற்கான பணிகள் கழகத்தில் சார்பில் முன்னெடுக்கப்பட்டபோது, மயிலாடுதுறை பகுதியில் முனைப்பாகச் செயல்பட்டவர் கணேசன்.

1966-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் அரிசிப் பற்றாக்குறையைக் கண்டித்தும், விலைவாசி உயர்வைக் கண்டித்தும் அனைத்துக் கட்சிகள் சார்பில் நடைபெற்ற அறப் போராட்டத்தை ஒருங்கிணைத்தவர்களில் விளநகர் கணேசனும் ஒருவர். அப்படியான தொடர் பணிகளின் பயன்தான், பேரறிஞர் அண்ணா தலைமையில், கழகம் 1967-ஆம் ஆண்டு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. அந்த அவையில் செம்பனார்கோயில் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக அமர்ந்தவர் கணேசன்.

## கார் அன்பளிப்பு

1967-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா ஆட்சிப் பொறுப்புக்கு வந்த, அடுத்த சில மாதங்களில் ஓர் இனிமையான நிகழ்வாக விளநகர் கணேசனுக்கு கார் வழங்கினார். கணேசன் தனது காரை கழகத்தின் பணிக்காகக் கொடுத்ததை அடுத்து, தொகுதி மக்கள் நிதி திரட்டி, அவருக்கு கார் பரிசளித்தனர். அதை வழங்கும் நிகழ்ச்சி, 1967-ஆம் ஆண்டு ஜூலை 30-ஆம் தேதி, செம்பனார்கோயில் திலகர் திடலில் நடைபெற்றுள்ளதை கழகத்தின் ஏடான ‘நம்நாடு’ பதிவு செய்துள்ளது.

இந்த நிகழ்ச்சி தொடர்பாக கவிஞர் கருணானந்தம் ‘அண்ணா சில நினைவுகள்’ நூலில் குறிப்பிடுகையில், “கணேசனுக்குக் கார் கொடுத்தால், ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் கார் வழங்குவதற்கு மக்களைத் தூண்டுவதாக ஆகிவிடும்” என அண்ணா தயங்கி இருக்கிறார். ஆனால், கணேசன் அதற்கு முன்பே கார் வைத்திருந்தவர் என்பதாலும், அந்த நிகழ்ச்சியை காரணமாக வைத்து, அண்ணாவை பொதுக்கூட்டத்துக்கு அழைக்கலாம் என்பதும்தான் காரணம் என கருணானந்தம் பதிவு செய்கிறார்.

**கணேசன் தனது காரை கழகத்தின் பணிக்காகக் கொடுத்ததை அடுத்து, தொகுதி மக்கள் நிதி திரட்டி, அவருக்கு கார் பரிசளித்தனர்.**

## மக்கள் பணிகள்

கட்சிப் பணிகள் மட்டுமல்ல, மக்கள் பணிகளில் அவர் காட்டிய தீவிரத்துக்குப் பல சான்றுகளைப் பார்க்க முடிகிறது. சுயமரியாதைச் சீர்திருத்தத் திருமணத்தின் முன்னோடியாக அப்பகுதியில் விளங்கியவர். செம்பனார்கோயில் ஒன்றியப் பெருந்தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எனக் கழகத்தின் பொறுப்புகளிலும் இருந்தவர்.

கலைஞரிடம் மாறா அன்பு கொண்டிருந்த கணேசன், 1971-ஆம் ஆண்டில் குத்தாலம் தொகுதியில் இருந்து இரண்டாவது முறையாக சட்டமன்றத்துக்குத் தேர்வானவர்.

மிசா கொடுங்கரங்களுக்குத் தப்பாத கணேசன், அதற்குப் பின்னர் நடந்த தேர்தலில், 1977-ஆம் ஆண்டில் பூம்புகார் தொகுதியில் இருந்து சட்டமன்றத்துக்கு வந்தார். அந்தத் தேர்தலில்போது கழகத்தின் வேட்பாளர்களை அறிவித்து, உடன்பிறப்புக்குக் கடிதம் எழுதுகிறார் கலைஞர்

“கழகத்தின் செயல்வீரர்களாகவும், தியாக மறவர்களாகவும், கழகத்தை உயிரெனக் கருதும் தொண்டுள்ளம் படைத்தவர்களாகவும் நமது வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்”என்றதுடன், வேட்பாளர்களின் பட்டியலில் மிசா கைதியாக அடைக்கப்பட்டிருந்தவர்கள் மட்டும் 40 பேர் எனக் குறிப்பிட்டிருந்தார். அந்த 40 பேரில், அந்தத் தியாக மறவர்களில் கணேசனும் ஒருவர் என்கிறது கடந்த காலம்.

அந்தத் தேர்தலில் கழகத்தின் சார்பில் 48 பேர் மட்டுமே வெற்றி பெற்றனர். பூம்புகார் தொகுதியில் கணேசன் வெற்றி பெற்றுச் சென்றது, கலைஞர் மீது மக்கள் கொண்டிருந்த அன்புக்குச் சான்றாக அப்போது பார்க்கப்பட்டது. ஏனென்றால், கலைஞர் மீட்டுருவாக்கம் செய்து, புனரமைக்கப்பட்ட நகரமாகப் பூம்புகார் இருந்தது. கடைக்கோடியில் இருக்கும் அந்த ஊரின் மீது கலைஞர் கவனம் செலுத்தி இருந்தார். கணேசன் அதைக் கழகக் கோட்டையாக்கினார்.

அந்த ‘ஆட்சிக்காலத்தில்’ கழகத்தின் செயல்வீரர்களை எந்த வழியிலாவது கட்சி மாற்றுவது அல்லது முடக்குவது ஆகியன வழக்கமாக இருந்தன. ஏனென்றால், தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருந்த கலைஞரை முடக்க வேண்டும் எனில், கழகத்தினரை முடக்க வேண்டும் என்பது ‘சிலரது’ திட்டமாக இருந்தது. கணேசன் கலைஞரின் உடன்பிறப்பாகத் தடம் மாறாமல் இருந்ததால்தான், அவர் மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் நினைவுகளைப் போற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர். கழகப்பணிகளில் தீவிரமாக இயங்கி வந்த இளைஞர் கணேசன், 1987-ஆண்டில் அக்டோபர் 10 ஆம் தேதி இயற்கை எய்தினார். மயிலாடுதுறை நகரம் இப்போதும் அவரது நினைவுகளைப் போற்றி வருகிறது.

கடந்த 2020-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இணையதளம் வாயிலான தேர்தல் பிரச்சாரத்தின்போது நாகை திருவாரூர் மாவட்டக் கழகங்களின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய இன்றைய முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்,

“எல்லைகளால் திருவாரூரும் - நாகையும் பிரிக்கப்பட்டு இருந்தாலும், உணர்வால் பிரிக்க முடியாத மாவட்டம் என்பதைக் காட்டிக் கொண்டு இருக்கிறீர்கள்” எனப் பாராட்டியபோது, நாகை என்றால் செம்பனார்கோவில் மிசா.பி.மதிவாணன், மாயவரம் செங்குட்டுவன், சிக்கல் கணபதி, பொறையாறு சம்பந்தம், பூம்புகார் மனோகரன், விளநகர் கணேசன் என மறக்காமல் நமது முன்னோடிகளின் பெயர்களை இளைஞர்களுக்குப் பதிவு செய்தார்.

தி.மு.கழகத்தின் முன்னோடிகள் எந்தக் காலத்திலும் மறக்கப்படுவதில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின்னும் அவர்களின் வரலாற்றை நினைக்கும் தலைமுறை உருவாகிக் கொண்டே இருக்கும்.

**...துடிக்கும்**

## கலகக்காரர் ‘கலாநிதி’ கிருஷ்ணா!

பிறப்பால் பார்ப்பனராக இருந்தாலும் ஆதிக்கத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பதுடன், அதற்கு எதிராகச் செயல்படுபவராகவும் திகழ்பவர், கர்நாடக இசைக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணா.

‘கர்நாடக சங்கீதம் பார்ப்பனர்களுக்கு மட்டுமே வயப்பட்டது’ என்பதை உடைக்கும் வகையில், ஆல்காட் குப்பத்துக் குழந்தைகளுக்கு கர்நாடக இசையைக் கற்றுத் தருவது, குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக கர்நாடக இசையிலேயே பாடல்களைப் பாடியது, மாட்டுத்தோலைக் கொண்டு மிருதங்கம் தயாரிப்பதை காஞ்சி சங்கராச்சாரியார் ஆதரித்ததைத் தன் நூலில் பதிவு செய்தது, வைக்கம் நூற்றாண்டு விழாவையொட்டி, எழுத்தாளர் பெருமாள் முருகன் பெரியார் குறித்து எழுதிய பாடலுக்கு இசைவடிவம் தந்து பாடியது, பார்ப்பனியத்தையும், பா.ஜ.க அரசையும் விமர்சித்துத் தொடர்ந்து பல நாளிதழ்களில் கட்டுரைகள் எழுதி வருவது, என கிருஷ்ணாவின் செயல்பாடுகள், அவரை கர்நாடக இசை உலகின் கலகக்காரராக மாற்றியுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் சிறந்த கர்நாடக இசைக் கலைஞர்களுக்கு ‘சங்கீத கலாநிதி’ விருது வழங்குகிறது சென்னை மியூசிக் அகாடமி. இந்த ஆண்டு பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு அறிவித்தது. அதையடுத்து அந்த விழாவில் கலந்துகொண்டு பாடப்போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள் கர்நாடக இசைப்பாட்டு ரஞ்சனி – காயத்ரி சகோதரிகள். கிருஷ்ணா, கர்நாடக இசை மேதைகளை அவமதித்துவிட்டார் என்று குற்றம்சாட்டியதுடன் பெரியாரைப் பற்றிப் பாடியதாலேயே அவர் கலந்துகொள்ளும் இந்த விழாவைப் புறக்கணிப்பதாகவும் அந்தப் பாடகிகள் தெரிவித்திருக்கிறார்கள். கூடவே பெரியார் குறித்த பல அவதூறுகளையும் அவிழ்த்துவிட்டுள்ளனர்.

பிறப்பால் பார்ப்பனராகவே இருந்தாலும், பார்ப்பன ஆதிக்கத்தை ஒருவர் எதிர்த்தால், அதுவும் அவர் பெரியாரைப் போற்றினால் அதைப் பார்ப்பனர்களால் தாங்க முடியாது, என்பதற்கு உதாரணம்தான் இந்தப் பாடகிகளின் கூற்று. ஆதிக்கத்துக்கு எதிராக உறுதியுடன் நிற்கும் கர்நாடக இசைக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு வாழ்த்துகள்!

## ஃப்ளாஷ்பேக்



பி.வசந்தகுமார்



### மறுமலர்ச்சி சால்வை!

1987-ஆம் ஆண்டு ராயபுரம் பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க வருகை தந்திருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்போது ‘தமிழர் மறுமலர்ச்சி மன்றம்’ என்ற அமைப்பை நடத்தி, கழகக் கொள்கைகளைப் பரப்பி வந்த நான், தலைவர் கலைஞர் அவர்களுக்கு சால்வை அணிவித்து, மரியாதை செய்தேன். 37 ஆண்டுகளைக் கடந்த பிறகும் அந்த நினைவு என் மனதில் பசுமையாக உள்ளது.

–பி.வசந்தகுமார்,
சூளைமேடு, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### மகத்தான வெற்றி!

1971-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்துக்கு எதிராக கடுமையான பிரச்சாரம் இருந்தது. தி.மு.க.வைத் தோற்கடிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள், பண்ணையார்கள், பத்திரிகைகள் வெளிப்படையாகவே வேலைகள் செய்தனர். அவை எல்லாவற்றையும் முறியடிப்பதற்காக, தமிழ்நாடு முழுவதும் 30 நாட்கள் சூறாவளியாக தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார் கலைஞர். காலையில் தொடங்கும் பிரச்சாரம், நள்ளிரவு வரை நீளும். அந்தத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி 40 தொகுதிகளிலும் கழகக் கூட்டணி வெற்றிவாகை சூடியது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

426

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131